# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 359 கார்த்திகை 07ஆம் நாள் சனிக்கிழமை 23 நவம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## சிமெந்து விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ. 23
995 ரூபாவாக காணப்பட்ட சிமெந்தின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு நேற்று முதல் 1095 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

(ஒ,5)

## மயங்கி விழுந்தவர் சாவு

யாழ்ப்பாணம், நவ. 23
நாவாந்துறையை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தை காய்ச்சலினால் அவதிப்பட்ட நிலையில், மயங்கி விழுந்துள்ளார். அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. 03

### இலங்கை அரசு - தமிழ் மக்கள் - இந்திய அரசு

# முத்தரப்பு இணைந்துதான் இனப்பிரச்சினைக்கு தீர்வு

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், நவம்பர் 23
நீண்டகாலமாகத் தொடரும் இனப்பிரச்சினையால் தமிழ் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களை, துயரங்களை அனுபவிக்கின்றனர். இலங்கை அரசு, தமிழ் மக்கள், இந்திய அரசு முத்தரப்பும் இணைந்துதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும். இந்த முயற்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னால் முடியுமானளவு சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கும். தமிழ் டிக்களின் வேணவாக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் தீர்வு காணப்படவேண்டும். இந்திய அரசு இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அதீத கரிசனையைக் கொண்டுள்ளது. இந்திய அரசு தற்போது முன்வைத்துள்ள அடியிலிருந்து ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். 23

## சி.ஐ.டி. பணிப்பாளர் ஷானியின் இடமாற்றம் அரசியல் ரீதியானது

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு ஐ.தே.க. ஏன் மௌனம் என்றும் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 23
வசிம் தாஜுதீன், லசந்த விக்கிரமதுங்க, மாணவர்கள் கடத்தல் உள்ளிட்ட மிக முக்கியமான வழக்குகளை விசாரித்த, குற்றப் புலனாய்வுப் பணிப்பாளர் ஷானி அபயசேகரவின் இடமாற்றம் அரசியல் ரீதியானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. 03

## 7,000 நியமனங்களை நிறுத்தியது அரசு

### அரசியல் பழிவாங்கலா?

யாழ்ப்பாணம், நவ. 23
இலங்கையில் அண்மைக் காலத்தில் வழங்கிய நியமனங்கள் அனைத்தையும் நிறுத்துமாறு திறைசேரிச் செயலர் அறிவுறுத்தியுள்ளார். இந்த அறிவுறுத்தலால் 7 ஆயிரம் செயற்றிட்ட உதவியாளர்கள் பதவி இழந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 23

## யாழ்ப்பாணத்தை நோட்டம்விட்டது உலங்குவானூர்தி

யாழ்ப்பாணம், நவ. 23
யாழ்ப்பாணத்தில் உலங்குவானூர்தி மூலம் உளவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக வான் படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வான் படையால் வழமையாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் நகரில் நேற்று மாலை 4.30 மணியளவில் வான் படையின் உலங்குவானூர்தி சுமார் 15 நிமிடங்கள் வட்டமிட்டது. அத்துடன்; கோப்பாய், அச்சுவேலி உள்ளிட்ட பிரதேசங்களிலும் உலங்குவானூர்தி வட்டமிட்டது.
போதைப்பொருள் மற்றும் மணல் கடத்தல் நடவடிக்கைகள் உள்ளிட்டவை தொடர்பில் வான் படை ஓர் சீரான கால இடைவெளியில் வானிலிருந்து உளவு நடவடிக்கையை முன் 23

### அமைச்சரவை நியமிப்பு

## கோத்தபாயவின் நடவடிக்கை அரசமைப்புக்கு முரணானது

### சாடுகிறார் சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், நவ. 23
பாதுகாப்பு அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு ஆகியுவற்றை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தன் வசம் வைத்துக் கொள்ள முயற்சிப்பாராயின் அவரது நடவடிக்கை அரசமைப்புக்கு முரணானது. சட்டவிரோதமான செயற்பாடு. இவ்வாறு தமிழ்த் 03



### சமலும் அமைச்சரவையில்

## மகிந்த உட்பட 16பேர் நேற்று அமைச்சர்களாகப் பதவியேற்பு

### டக்ளஸூக்கும் அமைச்சுப் பதவி முஸ்லிம்களுக்கு இடமில்லை

கொழும்பு, நவ. 23
அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச முன்னிலையில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான இடைக்கால அரசின் அமைச்சரவை நேற்று சத்தியப்பிரமா 23

## வீதி பெயர்ப்பலகையில் தமிழ்மொழி நீக்கம்

### பாணந்துறையில் சம்பவம்



கொழும்பு, நவ. 23
அரச தலைவர் தேர்தலின் பின்னர் தெற்கில் வீதி ஒன்றின் பெயர் பலகையிலிருந்த தமிழ் எழுத்துக்கள் மறைக்கப்பட்டுள்ளன.
நாட்டில் வீதிப் 03

## ஆயுதப் படைகளின் உதவிபெறலாம்

### அரசிதழ் வெளியிட்டார் கோத்தபாய

யாழ்ப்பாணம், நவ. 23
அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், தேவைப்பட்டால், ஆயுதப்படையினரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கான உத்தரவை அரச 03

# வாஸ்து தோசத்தை நீக்கும் மயில் இறகு

மயில் கடவுள் முருகனின் வாகனம் என்பதால், அதன் இறகை புனிதமானதாகக் கருதி, பலரும் தங்களது வீட்டு பூஜை அறையில் வைத்திருப்பார்கள். ஆனால் இந்த மயில் இறகு வாஸ்து தோஷம் உள்ளிட்ட பல தோஷங்களை நீக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

மூன்று மயில் இறகை ஒன்றாகச் சேர்த்து கருப்பு நிறக் கயிற்றினால் கட்டி, சிறிது பாக்கை நீரில் போட்டு, அந்நீரைத் தெளித்தால் சனி தோஷம் நீங்கும்.

நகை மற்றும் பணம் வைக்கும் அலமாரியில் ஒரு மயில் இறகை வைக்க வேண்டும். இதனால் அந்த அலமாரியில் செல்வம் அதிகம் சேர்வதோடு, நிலைக்கவும் செய்யுமாம்.

மயில் இறகை வீட்டின் முன் வைப்பதால், வீட்டினுள் எதிர்மறை ஆற்றல்கள் நுழைவதைத் தடுப்பதோடு, வீட்டில் இருக்கும் எதிர்மறை ஆற்றல்களும் நீங்கும்.

ஒருவர் அலுவலகத்தில் தாம் அமரும் இடத்தில் மயில் இறகை வைப்பதன் மூலம், அவரது இடத்தின் அழகு மேம்படுவதோடு, உற்பத்தித் திறனும் அதிகரிக்குமாம்.





# தீபத்தின் வகைகள்

தீபத்தில் மகாலட்சுமி வசிப்பதால், தீபம் ஏற்றியதும், தீபலட்சுமியே நமோ நம என்று கூறி வணங்குவது அவசியம். தீபங்களில் பலவகைகள் உண்டு. அவை என்னென்ன என்பதைப் பார்ப்போம்.

**சித்ர தீபம்**: வீட்டின் தரையில் வண்ணப் பொடிகளால் சித்திரக் கோலம் இட்டு, அதன்மீது ஏற்றப்படும் தீபம் சித்ர தீபம் ஆகும்.

**மாலா தீபம்**: அடுக்கடுக்கான தீபத் தட்டுகனில் ஏற்றப்படும் தீபம் மாலா தீபம் ஆகும்.

**ஆகாச தீபம்**: வீட்டின் வெளிப்புறத்தில் உயர்ந்த பகுதியில் ஏற்றிவைக்கப்படும் தீபம் ஆகாச தீபமாகும். கார்த்திகை மாதம் சதுர்த்தி திதி நாளில் இந்தத் தீபத்தை ஏற்றி வழிபட்டால், எம பயம் நீங்கும்.

**ஜல தீபம்**: தீபத்தை எற்றி நதி நீரில் மிதக்க விடப்படும் தீபத்திற்கு ஜல தீபம் என்று பெயர்.

**படகு தீபம்**: கங்கை நதியில் மாலை வேளையில் வாழை மட்டையின் மீது தீபம் ஏற்றி வைத்தும், படகு வடிவங்களில் தீபங்கள் ஏற்றி வைத்தும் கங்கையில் மிதக்கவிடுவதற்குப் பெயர் படகு தீபம் ஆகும்.

**சர்வ தீபம்**: வீட்டின் அனைத்துப் பாகங்களிலும் வரிசையாக ஏற்றிவைக்கப்படுபவை சர்வ தீபமாகம்.

**மோட்ச தீபம்**: முன்னோர் நற்கதியடையும் பொருட்டு, கோயில் கோபுரங்களின் மீது ஏற்றி வைக்கப்படும் தீபம் மோட்ச தீபம் ஆகும்.

**சர்வாலய தீபம்**: கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று மாலை வேளையில் சிவன் கோயில்களில் ஏற்றப்படுவது சர்வாலய தீபமாகும்.

**அகண்ட தீபம்**: மலையுச்சியில் பெரிய கொப்பரையில் ஏற்றப்படுவது அகண்ட தீபம் ஆகும்.

**லட்ச தீபம்**: ஒரு லட்சம் விளக்குகளால் கோயிலை அலங்கரிப்பது லட்ச தீபமாகும்.

**மாவிளக்கு தீபம்**: அரிசி மாவில் வெல்லம் போட்டு, இளநீர் விட்டுப் பிசைந்து உருண்டையாக்கி, நடுவில் குழியிட்டு நெய் ஊற்றி திரி போட்டு ஏற்றுவது மாவிளக்கு தீபம் ஆகும்.

உதயன் சிறுவர் மகிழ்களம் 2019
காலம் : 23.11.2019 சனிக்கிழமை
பிற்பகல் 2.00 மணி
இடம் : சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி
தலைமை
கௌரவ ஈ.சரவணபவன் (பா.உ)
(தலைவர் - உதயன் குழுமம்)
முதன்மை அதிதி
கௌரவ. ச.பாலச்சந்திரன்
(துணைத்தூதுவர் -இந்தியதூதரகம்)
சிறப்பு அதிதிகள்
உயர்திரு த.கிருபாகரன்
(வலயக் கல்வி பணிப்பாளர்-தென்மராட்சி)
கௌரவ பிரதேசசபை, நகரசபை, தலைவர்கள், உறுப்பினர்கள்
கௌரவ அதிதிகள்
திருமதி. அ. சரோசாதேவி
(உதவிக்கல்வி பணிப்பாளர்-முன்பள்ளி)
உயர்திரு. செ. பேரின்பநாதன்
(அதிபர்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)
உயர்திரு. வ. ஸ்ரீபிரகாஸ்
(உபதலைவர்-சாவகச்சேரி வர்த்தக சங்கம்)
உயர்திரு. இ.கந்தசாமி
(சனசமூகநிலையங்களின் ஒன்றியத் தலைவர்)
உயர்திரு. அ.செந்தூரன்
(ஆசிரியர்)
சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
உதயன்

# எம்.ஜி.ஆர் வேடத்துக்காக தோற்றத்தை மாற்றிய அரவிந்த்சாமி





மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்க்கை கதை 'தலைவி' என்ற பெயரில் படமாகிறது. ஜெயலலிதா வேடத்தில் கங்கனா ரணாவத் நடிக்கிறார். இயக்குநர் ஏ.எல். விஜய் இந்தப் படத்தை இயக்குகிறார். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய 3 மொழிகளில் தயாராகிறது. இந்தப் படத்தில் எம்.ஜி.ஆர் வேடத்தில் அரவிந்த்சாமி நடிக்கிறார். இவர் ரோஜா, பம்பாய் உள்ளிட்ட படங்களில் நடித்து பிரபலமானவர்.

எம்.ஜி.ஆர் வேடத்தில் நடிக்க அரவிந்த்சாமி தனது தோற்றத்தை மாற்றி இருக்கிறார். மீசையில்லாமல் எம்.ஜி.ஆர் போலவே இருக்கும் அவரது ஒளிப்படம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார்.

## மயங்கி...

நாவாந்துறை தெற்கைச் சேர்ந்த கனகரத்தினம் ராஜேந்திரன் (வயது-43) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக கடந்த 18ஆம் திகதி அவதிப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மறுநாள் சிகிச்சை பெற்றுள்ளார். எனினும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பகல் முழுவதும் காய்ச்சலால் கடுமையாக அவதிப்பட்டுள்ளார். அவர் உணவு அருந்தவில்லை. திடீரென மயங்கிவிழுந்துள்ளார். அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்த போதும், உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார், விசாரணைகளை மேற்கொண்டார். (ஒ.5,26)

## சி.ஐ.டி...

கடற்படையினருடன் தொடர்புடைய மாணவர்கள் கடத்தல், லசந்த விக்கிரமதுங்க கொலை, வசிம் தாஜுதீன் கொலை, மருத்துவர் சாபிக்கு எதிராக சுமத்தப்பட்ட கருக்கலைப்பு குற்றச்சாட்டு வழக்கு, உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கு, கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் வழக்கு உள்ளிட்ட முக்கிய வழக்குகளை நெறிப்படுத்தி நடத்தியவர் குற்றப் புலனாய்வுப் பணிப்பாளர் ஷானி அபயசேகர.

கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராகப் பதவியேற்ற பின்னர் அவருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றம் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

'இது அரசியல் நோக்கம் கொண்ட இடமாற்றம். மனித உரிமை மீறல் தொடர்பான பல உயர்மட்ட வழக்கு விசாரணைகளை அவர் நடத்தினார். பதில் பொலிஸ்மா அதிபர் இத்தகைய அரசியல் அழுத்தத்துக்கு ஏன் இடம்கொடுத்தார்? சுயாதீனமான பொலிஸ் ஆணைக்குழு சுதந்திரமாகச் செயற்படவேண்டும். இந்த விடயம் தொடர்பில் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஏன் மௌனமாக இருக்கின்றது?' என்று பதிவிட்டுள்ளார். (ஒ.5)

## கோத்தபாயவின்...

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டது. 16 பேர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சு ஒருவருக்கும் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும், அரச தலைவர் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோது,

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக அரச தலைவராகத் தெரிவு செய்யப்படுபவர் தன் வசம் அமைச்சுப் பொறுப்புக்களை வைத்திருக்க முடியாது. முன்னாள் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு மாத்திரம் அவரது முதலாவது பதவிக் காலத்துக்கு விதிவிலக்காக, பாதுகாப்பு, மகாவலி, சுற்றுச்சூழல் அமைச்சுக்கள் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. இனி தெரிவாகும் எந்தவொரு அரச தலைவரும் அமைச்சுப் பொறுப்புக்களை வைத்திருக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அந்த அமைச்சுப் பொறுப்பை வழங்கலாம். இல்லாவிடின், நேற்று அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட 16பேரில் ஒருவருக்கு அந்த அமைச்சுக்களை வழங்கியிருக்கலாம். இதுவரை அந்த அமைச்சுப் பொறுப்புக்களை ஒருவருக்கும் வழங்கவில்லை என்பதால், அரச தலைவர் கோத்தபாய தான் வைத்திருக்க முயற்சிக்கலாம். அவ்வாறு அவர் செய்வாராயின் அது அரசமைப்புக்கு முரணானது -என்றார். (ஒ.5)

## வீதி...

பெயர்ப்பலகைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இடம்பெற வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படும் நிலையில் சிறுபான்மை மக்களை அதிருப்தியடைய வைக்கும் வகையில் இந்தச் செயற்பாடு அமைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாணந்துறையில் உள்ள சுசந்த மாவத்தை வீதிப் பெயர்ப்பலகையிலேயே தமிழ் மொழி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஆயுதப்...

தலைவர் கோத்தபாய ராஜபக்ச மீளவும் நடைமுறைப்படுத்தினார்.

முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்ட கட்டளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையுடன் நிறைவடைந்த நிலையில் மீளவும் நடைமுறைப்படுத்தும் உத்தரவை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச நேற்று அரசிதழ் அறிவிப்பு ஊடாக வழங்கினார்.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குமுறைகளுக்கு அமைய, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு, அனைத்து மாவட்டங்களிலும் தேவைப்பட்டால் ஆயுதப்படைகளின் உதவியைப் பெற முடியும் என்று அந்த அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ.5)


## மரண அறிவித்தல்கள்

தோற்றம் 18 . 07 . 1939



மறைவு 21 . 11 . 2019

### அந்தோனிப்பிள்ளை டொன்பொஸ்கோ

(ஓய்வு பெற்ற யாழ் பொது நூலக மேற்பார்வையாளர்)

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை டொன்பொஸ்கோ 21.11.2019 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஏஞ்சல் மேரி புனிதராக்கினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பசில் சுரேந்திரன் மற்றும் பமிலாலோஜினி (சித்த வைத்தியர், சுவிற்சர்லாந்து), கில்ரன் நரேந்திரன் (என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் - வவுனியா பொது வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாளினி, இரத்தினம், கரீனா ஆகியோரின் மாமனாரும் அன்றியா, இராகினி, இராகவ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஜீவரட்ணம், யோசவ் சேவியர் மற்றும் கிறிஸ்ரீனம்மா, மேரி றோசனின் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.11.2019) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து புனித கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பமிலா பவனம்,
சில்லாலை.

தகவல் : பிள்ளைகள்.

(CS 29463)(14,17)

பிறப்பு 07 . 11 . 1940



இறப்பு 19 . 11 . 2019

### வசந்தாதேவி சிவபாலன்

யாழ். கொக்குவில்கிழக்கு அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், ஹற்றன், யாழ். கொக்குவில்கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தாதேவி சிவபாலன் 19.11.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார், கொக்குவில்கிழக்கு அம்மன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை(ஓவசியர்) - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், ஏழாலை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவஞான சுந்தரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் ஹற்றனைச் சேர்ந்த சிவபாலனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் (அன்னம்) நடராசா, தங்கேஸ்வரி(இரத்தினம்) முத்தையா, பரராசசிங்கம் வேலுப்பிள்ளை, மற்றும் தங்கமணி கந்தப்பிள்ளை, விமலாதேவி (பேபி) நமசிவாயம், சுசிலாதேவி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியை 24-11-2019 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரதவீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல் : குடும்பத்தினர்.
மயூரம்

தொடர்புகளுக்கு : சிவபாலன் (கணவர்)
தேவகுமாரி } 021 205 3368
யசோதா } 077 910 2961

(CS 29393)(14.17)

## மரண அறிவித்தல்

பிறப்பு 16 ...... 09 ...... 1947



இறப்பு 22 ...... 11 ...... 2019

### வைத்திலிங்கம் சிவகுமாரன்

காரைநகர் ஆலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் (முகாந்திரம்) முத்துக்குமாரு வைத்திலிங்கம் சிவகுமாரன் நேற்று **(22.11.2019)** வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் அமிர்தவல்லியம்பாள் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் அம்பிகை தம்பதியரின் மருமகனும் சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும், சிவமலர் (திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம்), சிவமதி (கனடா), சிவகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயரூபன் (கிராமிய தொழிற்துறை திணைக்களம், கிழக்கு மாகாணம்), ஜெயக்குமார் (கனடா), அனிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரதீஷன், பாகவன், ஆகீஷன், யதுர்ஷன், பவதர்சன், மதுஷா, அபூர்ணா, அதிசயா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவகலை மற்றும் சிவமணி, காலஞ்சென்ற சிவகௌரி மற்றும் சிவதேவி, சிவபூரணி, சிவபாலன், சிவயோகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகராசா, சிவஞானம், காலஞ்சென்ற தர்மரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, பத்மாவதி, அருள்பிரகாசம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

CS2948(16/17)

ஆலடி, காரைநகர்.
077 911 8011, 021 221 1446

தகவல்: குடும்பத்தினர்

PEOPLE'S BANK

## தங்கநகை ஏல விற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.10.2018 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 21.12.2019 (சனிக்கிழமை), 22.12.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ் ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | 20.12.2019 | 21.12.2019 (சனிக்கிழமை) 22.12.2019 (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | |
| தெல்லிப்பளை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | .... | | |
| நெல்லியடி | ... | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சாங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | ....... | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**இல : 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல: 021 222 2601/ 021 222 8602**
**தொலைநகல் : 021 222 2602**
**ஈ- மெயில் : jafrho@peoplesbank.lk**

(C 11722) (14.17)

**ஐங்கரன் பாம்**
பிறவுன் றோட், கலட்டிச்சந்தி
யாழ்ப்பாணம்.

**விலை விபரம்**
**23.11.2019 - 29.11.2019 வரை**
**மொத்த கொள்வனவுக்கு**
- புறொயிலர் உயிருடன் - 300/=
- புறொயிலர் சுத்தம் செய்து - 450/=

**T.P- 077 905 0165**

**வீடு வாடகைக்குண்டு**
வேலணை மேற்கு 7ம் வட்டாரம்
சிற்பனை வீதியில் வாடகைக்கு உண்டு.
**077 394 6826**

## எண்மூன்றாண்டுகள் நீங்கா நினைவில்





அமரர்
**கனகசபை சண்முகசுந்தரம்**
(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)
தோற்றம்:- 03.11.1941

மறைவு
23.11.1995

அமரர்
**சண்முகசுந்தரம் சிவரூபன்**
(மாணவன் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)
தோற்றம்:- 18.08.1983

வண்மை யிழந்து வாட்டத்தில் வீழ்ந்து
எண்மூன் றாண்டுகள் உருண்டு மறைந்தன
இன்றுநாம் உமையெண்ணி ஏற்றுகிறோம் நினைவுஒளி
என்றும் நீவிர் எம்மனதில் இருந்திடுவீர்

**துர்க்கா இல்லம்,**
**29,ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS29469)(11.17)

# மரண அறிவித்தல்

# திருமதி தங்கம்மா செல்லையா



**மண்ணில்**
**20.02.1942**

**விண்ணில்**
**21.11.2019**

கனகராஜன்குளம், மன்னகுளத்தைப் பிறப்பிடமாகவும் உக்கிளாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா செல்லையா கடந்த (21.11.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் தர்மலிங்கம், சீதேவிப்பிள்ளை காலஞ்சென்றவர்களான அன்னம்மா லட்சுமி மற்றும் தியாகராஜா (முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற வீரவாகு செல்லையா (சமாதான நீதவான்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வீரவாகு கண்ணகை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குணபாலசிங்கம் (காணி வெளிக்கள போதனாசிரியர்) மற்றும் பரமேஸ்வரி, தனபாலசிங்கம் (மாவட்ட செயலகம்-முல்லைத்தீவு), மாணிக்கநடராஜா, (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), ஜெயபாலசிங்கம் (அதிபர்-வவுனியா சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்), சூரியப்பிரகாசம் (லண்டன்), பாலகிருஷ்ணன் (அதிபர்-வவுனியா கனகராஜன்குளம் ஆரம்ப வித்தியாலயம்), கிரிஜா (ஆசிரியர்-புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஜெயநாயகம் (முன்னாள் முகாமையாளர் -ப.நோ.கூ.ச), பேரின்பவதனி (ஆசிரியர்- முஸ்லீம் மகாவித்தியாலயம் தண்ணீரூற்று), சுமதி, நளாயினி (ஆசிரியர் - இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), வையந்திமாலா (லண்டன்), வினோதினி (ஆசிரியர்- கூமாங்குளம் சித்திவிநாகர் வித்தியாலயம்), ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்சன், தனோஜா, கேதரன், ஆத்மிகா, சுவப்னா, பவித்ரா, கபிஷ்னா, ஹர்ஷிதன், காவியன், இலக்கியன், கேசாத்மி, அபிராத்மி, சுடர்சி, யனுஸ்சி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் இல.238 C உக்கிளாங்குளம், வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இல.238C உக்கிளாங்குளம்,**
**வவுனியா.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 603 2068, 077 696 9153**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1982இல் பரணி 2ஆம் பாதத்தில் பிறந்த, கிரகபாவம் 35½ லக்கினத்தில் செவ்வாய் சூரி. கொழும்பில் தனியார் கல்வி நிறுவனத்தில் கணினி விரிவுரையாளராக கடமையாற்றும் கணினித்துறையில் அனைத்துப் பட்டங்களும் பெற்ற, 5அடி 6அங்குலம் உயரம் உடைய சைவ போசனம், கொழும்பில் தங்கியுள்ள மணமகனுக்கு பொருத்தமான அரச, தனியார் நிறுவனத்தில் உத்தியோகம் பார்க்கும் மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

**077 743 2645** (CS 29474)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 1991 இல் பூராடம் 4ஆம் பாதத்தில் பிறந்த, கிரகபாவம் 33, 7இல் செவ்வாய் சுக்கிரன் கேது, கொழும்பு அமைச்சில் உதவி பணிப்பாளராக கடமையாற்றும் BICT பட்டம் பெற்ற SLAS III - 5அடி 6அங்குலம் உயரம் உடைய மணமகளுக்கு பொருத்தமான உத்தியோகம் பார்க்கும் மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

**077 743 2645** (CS 29475)

## வலிகாமம் மேற்குபிரதேச சபையின் வரவுசெலவுத்திட்டம் - 2020

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்திற்கும், அது தொடர்பாக காலத்திற்கு காலம் வெளியிடப்பட்ட திருத்தங்களுக்கும் அமைவாகத் தயாரிக்கப்பட்ட 2020ஆம் நிதியாண்டிற்கான எமது சபையின் வரவு செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக காரைநகர் வீதி, சுழிபுரத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திலும், சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் 23.11.2019 இலிருந்து 06.12.2019ஆம் திகதிவரை மக்களது பார்வைக்காகவும் அபிப்பிராயங்கள் மற்றும் ஆலோசனைகளுக்காகவும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

வலிகாமம் மேற்கு
பிரதேச சபை,
சுழிபுரம்.
23.11.2019

தர்மலிங்கம் நடனேந்திரன்,
தவிசாளர்.

## 29 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கூட்டுறவாளர்
**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க. சமாசம்)

தோற்றம்
06.10.1927

மறைவு
23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 29 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,கோப்பாய் பிராந்தியம்**

## 29 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



கூட்டுறவாளர்
**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ்.மா.சி.க.கூ.சங்க. சமாசம்)

தோற்றம்
06.10.1927

மறைவு
23.11.1990

சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்கள் மறைந்து இன்று 29 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் .**

## விற்பனை

பெண்டம் கோழி விற்பனைக்கு உண்டு. (CS/29473) (11.17)

**077 537 6646**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ ஜேர்மன் PR உடைய சூரி - செவ் 4 இல் 24.01.1981 கிரகபாவம் 21¼ இலங்கை வந்துள்ளார். உடனடி தேவை.

**077 600 4344, 077 674 0885**

## பொது அறிவித்தல் வரவு செலவுத் திட்டம் 2020 பொதுமக்கள் பார்வைக்கு வைத்தல்


வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட வரைபு அறிக்கையானது 1987ஆம் ஆண்டு பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்தின் 168ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு 22.11.2019 முதல் 05.12.2019 வரை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்வரைபு அறிக்கையினை அலுவலக நேரத்தில் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும், எமது சபையின் பொது நூலகங்களிலும் பார்வையிடலாம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஈழ மக்கள் ஜனநாயககட்சி செயலாளர் நாயகம்

**கௌரவ K.N.டக்ளஸ் தேவானந்தா**



அவர்களுக்கு கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சராக பதவி வழங்கப்பட்டமைக்காக எமது குருநகர் மீனவர் மக்கள் சார்பாக பாராட்டுகின்றோம்.

ஒரு தமிழ் மகனுக்கு நீண்ட காலத்திற்கு பின் மேற் குறிப்பிட்ட அமைச்சு பதவி வழங்கப்பட்டது பெரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் அவரை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

வாழ்த்துவோர்: **குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கம் நிர்வாகிகள்.**

Congratulations

(cs 29465) (13.17)

## பொன்மொழிகள்


1. இனிய சொற்களையே பேசுங்கள்! தானே உலகின் தலைவனாகலாம்– சிசிரோ
2. உள்ளங்கள் அன்பினால் மலர்ச்சி பெறுகின்றன– ஹென்ரிச் ஹெயின்
3. புத்தகங்கள் நம்மிடம் மௌனமாகப் பேசுகிறது. அகத்தில் காட்சிகளை விரிக்கிறது– தாகூர்
4. துன்பமோ, இன்பமோ எல்லாச் சமயங்களிலும் புன்னகைப்பது சான்றோர்களின் சொத்து–செஸ்டர் ஃபீல்ட்
5. கவலையைச் சுமப்பவன் யாரையும் கவர முடியாது– ஹ்யூம்
6. கடவுளுக்கு அடுத்தபடியாக நேரத்தை மதித்தல் வேண்டும். அது ஒழுக்க முறையில் உயர்ந்த விதியாகும் – லவேட்டர்

## சிட்டே சிட்டே பறந்து வா! சி



சிட்டே சிட்டே பறந்து வா!
சிறகை சிறகை விரித்து வா!
கொட்டிக் கிடக்கும்
மணிகளைக்
கொத்தி கொத்தித்
திண்ண வா!
ஆற்று நீரில் குளிக்கி
றாய்!
அழகாய் துள்ளி
ஆடுகிறாய்!
சேற்று வயலில்
அமர்கிறாய்!
திறந்த வெளியில்
திரிகிறாய்!
உன்னைப் போல
பறக்கனும்;
உயர உயர செல்ல
னும்!
என்னை அழைத்துச்
சென்றிடு;
ஏற்ற இடத்தைக்
காட்டிடு!

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 24.10.2019 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தையா புவனேஸ்வரன் (குட்டி)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 23.11.2019 சனிக்கிழமை முற்பகல்10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுடை,
மானிப்பாய்.

(CS 24165)

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 | 20 |
| 03 | 11 |
| 1928 | 2019 |

## கந்தையா சிவலிங்கம் (சின்னத்துரை)

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவலிங்கம் **20.11.2019** புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்ரமணியம், சிவஞானவதி, பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரி (கனடா), சாந்தகுமாரி (சுவிஸ்), செல்வகுமாரி (கனடா), சுதாகரன் (கனடா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரன் (கனடா), இந்திரகுமார் (சுவிஸ்), மணிவண்ணன் (கனடா), கீதா (கனடா), பாலினி (கனடா) ஆகியோரின் மாமனாரும் நிவேதா, சஜித்தா, மிரோஷன், விதுஷன், டிலூஷா, நிலூஷன், அம்ஷிகா, சர்மி, சரண்யா, அக்ஷியா ஆகியோரின் அன்புப் பேரனும் ரீனா, சோபி ஆகியோரின் பூட்டனும் விஜயகுமார் (சந்திரன்) இன் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(24.11.2019)** ஞாயிற்றுக்கிழமை காலை **8.00** மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் **10.00** மணிக்கு உரும்பிராய் இருளன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்: குடும்பத்தினர்.
021 223 2381
077 353 8626 (சந்திரன்)

CS29405(16/17)

ஓம் விராட்விஸ்வப்பிரமனே நமஹ



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 19 |
| 08 | 11 |
| 1966 | 2019 |

## வரராசசிங்கம் அருணகிரிநாதன் (அருணன்)

யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல 87/1 , கூமாங்குள வீதி, உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வரராசசிங்கம் அருணகிரி நாதன் (அருணன்) ஆச்சாரியார் அவர்கள் கடந்த (19.11.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அனனார் காலஞ்சென்ற வரராசசிங்கம் மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதி களின் அன்பு மருமகனும் சறோயினிதேவியின் (பாமா) பாசமிகு கணவரும் டிலக்ஷன் (வவுனியா விபுலானந்தர் கல்லூரி மாணவன்), காலஞ்சென்ற லக்ஷிதா ஆகியோரின் அன்புத்தந்தையும் கௌரிமலர், ஸ்ரீசெல்வநாதன், (ஜேர்மனி), மிருணாளினி, கிருபாகரன், காலஞ்சென்ற வசுததாரணி, தயாபரன், (ஆசிரியர்-சின்னடம்பன் பார்வதி வித்தியாலயம், ஐயப்பன் ஒப்பந்தகாரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற திசைநாதன், மற்றும் குணேஸ்வரி (ஜேர்மனி), பாலசந்திரன், பத்மாவதி, சண்முகநாதன், காலஞ் சென்ற பாலகிருஸ்ணன்,ஞானேஸ்வரி, சற்குணதேவி ஆகியோரின் மைத்து னரும் மோகன்ராஜ், தர்மினி, வசுதா, சஜித், கிருஷாந், நிரோஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கல்பனா, காஞ்சனா, பிரவீணா, சிந்துமன், பிரதீபன், அஜெயன் ஆகியோரின் பெரியப்பாவும் தக்சயன், சஸ்வின், பவிஸ்னா, சாருசன், கவிஸ்னா, தாட்சாயினி, டினோஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2019 ) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சானாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (CS 24166)(15,17)

தகவல் : குடும்பத்தினர்

077 936 4248, 077 607 6770 (இலங்கை), 004917661977338 (ஜேர்மனி)

# முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸில் வசித்து வந்தவருமான சிவப்பிரகாசம் சிவசிறிக்குமரன் அவர்களது முதலாவது ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (23.11.2019) சனிக்கிழமை சொந்தங்கள், உறவுகள் இணைந்து முத்துமாரி அம்மன் திவாகர் நற்பணி மண்டபத்தில் நடைபெறும்.

## சிவப்பிரகாசம் சிவசிறிக்குமரன்



| அன்னையின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 23.08.1963 | 23.10.2018 |

நேற்றாய் நிகழ்ந்தது போல்
இருக்க
ஆற்றாய் பறந்த
ஆண்டொன்றில்
நினைவகலா
நினைவுகள்
எங்களுடன்
நிலைத்திருக்க
நிஜத்தை இழந்த
தவிப்போடு இருக்க
உங்கள்
நினைவுகள்
அனைத்தும்
ஒவ்வொன்றாய் நீழ்
ஒளியாய்
நிழல் படமாய் ஓடுது
எம்முள்
அவைகள் எமை
நெறிப்படுத்த
அதன் வழியே நாமும்
இசைந்து
உங்கள் ஆத்மா
முத்துமாரியின்
பாதாரவிந்தங்களில்
சாந்தி அடைய
அன்னை அவள்
அருளை வேண்டி
பிரார்த்தனைகளுடன்...

2ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 25 |
| 02 | 10 |
| 1945 | 2019 |

அமரர் திருமதி

## லோகநாதன் நாகேஸ்வரி

அன்பின் அரவணைப்பாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் - எம்முடன்
வாழ்ந்த அன்புத் தெய்வமே! எங்கள்
நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த எமது குடும்ப விளக்கின் அணைவின்போது எமது துயரத்தில் பங்குகொண்ட அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல்கள், பத்திரிகைகள் மற்றும் பதாகைகள் மூலமும் அனுதாபங்களைத்தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும் பல்வேறு வகையில் உதவி ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (24.11.2019) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியிலும் ஆத்ம சாந்திப்பிரார்த் தனையிலும் தொடர்ந்து மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வளர்மதி, 5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.


UK Diploma in
BUSINESS MANAGEMENT
Level 4 Qualification
காலம்: 12 Months
othm qualifications
Why BLC?
தலைசிறந்த விரிவுரையாளர் குழாம்
அதி நவீன வசதிகள் மற்றும் கற்றல் உபகரணம்
விசாலமான பல்கலைச் சூழல்
இலவச ஆங்கில மொழி பயிற்சி
மாணவர் வசதிக்கேற்ற நேர அட்டவணை
இலகு தவணைக் கொடுப்பனவுச் சலுகை
இவை உட்பட இன்னும் பல விஷேட அம்சங்கள்.
London OTHM இன் நேரடி வழிகாட்டலில் சர்வதேச மற்றும் உள்நாட்டில் (OTHM & TVEC) அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
வகுப்புக்கள் வார இறுதி அல்லது இரவு நேரங்களில் மாணவர் வசதி அடிப்படையில் நடைபெறும்.
BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
தொடர்புகளுக்கு: 0777174443
T- 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk


Ministry of Skills Development and Vocational Training
german cooperation
DEUTSCHE ZUSAMMENARBEIT
giz
VTA
கட்டுமானத்துறையானது எமது பிராந்தியத்தில்
அதிக வேலை வாய்ப்பினை ஈட்டித்தரும் ஓர் துறையாகும். அதில் நாமும் இணைவதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதோடு மற்றவர்களிற்கும் முன்மாதிரியாக திகழ்வோம்.
பயிற்சியின்போது நாளொன்றிற்கு ரூபா 500 கொடுப்பனவாக வழங்கப்படும். 120 நாட்கள் பயிற்சியின் பின்னர் NVQ-3 சான்றிதழ் வழங்கப்படும்.
கட்டட நிர்மாணவியலாளர்
மரவேலை தொழில்நுட்பவியலாளர் (கட்டடம்)
ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
021 2227949 | 021 2211793 | 071 031 8862 | 071 0318737



357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472 esprintersjaffna@gmail.com www.esprinters.com



MADHU 0777 102131
SANCHU 0777 692318
INTAKE NOW ON
BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.
20 YEARS
ISO 9001:2008 CERTIFIED
021 221 9910 info@bcas.lk www.bcas.lk BCAS Ranked "Platinum Partner" No.1 once again

இன்று பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பிறந்ததினம். இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.



# ஆன்மிக ஈடுபாட்டுக்கு வழிகாட்டியவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

மருத்துவர் இ.கணேசமூர்த்தி
யாழ் சாயி நிலையம்

பிறந்தவர்கள் யாவரும் மகிழ்ச்சியை விரும்புவதுடன், துன்பம் வராமலும் இருக்கவே விரும்புகிறார்கள். ஆனால் வாழ்க்கையோ இரண்டும் கலந்தேயுள்ளது. இரண்டும் கலந்திருந்தாலும் நகரும் முகில்களைப்போலக் கலைந்துவிடும். உலகியலில் பொருள்களைச் சேர்ப்பதன் மூலமும் அதிகாரம் அந்தஸ்துக்கள் மூலமும், மகிழ்ச்சியை நிரந்தரமாக்க முயலுகிறோம். துன்பத்தை விலக்கவும், துன்பம் வராமலிருக்கவும், இறைவனை நாடுகின்றோம். இதெல்லாம் மாயையினதும், அஞ்ஞானத்தினதும் விளைவுகளேயாகும். நாம் ஞானப் பார்வை, ஞான மனப்பாங்கை ஏற்படுத்தினால் மகிழ்ச்சியால் துள்ளாமலும், துன்பத்தால் துவாளாமலும் சமநிலையிலும் வாழ்ந்து நிரந்தர ஆனந்தத்தை அனுபவிக்கலாம். இதற்கு ஆன்மிக ஈடுபாடு அவசியம். படைப்பில் நிச்சயமற்ற தன்மையுண்டு. அடுத்த நிமிடம் எல்லாம் மாறிப் போகலாம். இல்லாது மறைந்தும் போகலாம். இதன் தாக்கத்தை எதிர்கொள்ள ஆன்மிக ஈடுபாடு முக்கியம். எமக்கு நிரந்தரப் பாதுகாப்பை அளிக்கக்கூடியதும் இறை அருளேயாகும். விஞ்ஞானத்தில் மிகவும் சக்தி வாய்ந்தது அணு சக்தியேயாகும். இதனிலும் மேலான சக்தி ஆன்ம சக்தியாகும். ஆத்ம ஞானமே பிறப்பின்மையைக் கொடுக்கவல்லது. ஆகவே நாம் உலகியலில் வெற்றியடைவதற்கு எமது முயற்சியுடன், இறையருளும் தேவையாகிறது. ஒன்றின் சக்தி அதிசூட்சும நிலையில் வரையறையற்றதாக உள்ளது. இதைத்தான் ஆத்மா, பரப்பிரம்மம், பராசக்தி, பிரபஞ்சப் பேருணர்வு, இறைவன் என்றெல்லாம் அழைக்கின்றோம்.

**ஆன்மிக அவசியம் உணரப்பட வேண்டும்**

ஆன்மிகத்தின் அவசியத்தை உணர்ந்துவிட்டால் பொருத்தமான, நாட்டமுள்ள ஆன்மிக வழியைத் தெரிந்தெடுத்து அதில் விடாப்பிடியாக செயற்பட வேண்டும். நாம்பிறக்கும்போதே ஏதோ ஒரு சமயக்கோட்பாட்டில் பிறந்து வளர்கிறோம். அவரவர் தமது சமயக் கோட்பாடுகளை தெளிவாக விளங்கினால் எல்லாம் ஒன்று என்ற மகா உன்னத விளக்கம் ஏற்படும். இந்த 'எல்லாம் ஒன்று' மகா உன்னத தத்துவத்தை விளக்கிப் போதிக்கவே பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா பரபிரம்ம நிலையிலிருந்து ஒரு மனித உருவத்தில் அவதரித்தார். எவ்வெப்போதெல்லாம் தர்ம செயற்பாடுகள் குன்றுகின்றனவோ அவ்வப்போதெல்லாம் அவதார நிகழ்வு ஏற்படுமென்று, பகவத்கீதையில் கிருஷ;ண பகவான் கூறியுள்ளார். மானிட குலத்தை உன்னதமாக்குவதற்காக இறைதூதர்களும், மகான்களும், வௌ;வேறு காலங்களில் வெவ்வேறு இடங்களில் பிரசன்னமாகியுள்ளார்கள். எல்லோரும் உருவம், நாமம், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் வேறுபட்டாலும், போதித்த மையத் தத்துவம், அன்பேயாகும். பகவான் சத்திய சாயி பாபா, தான் ஒரு புதிய மதத்தையோ, மதப் பிரிவையோ உண்டாக்க வரவில்லையென்றும், அவரவர் மதத்திலே உன்னத நிலையை அடையவேண்டும் என்பதற்காகவும் மதக் கோட்பாடுகளின் தெளிவான கருத்தை அளிக்கவுமே உதித்தேன் என்று கூறியுள்ளார். இதற்காகவே இவரை சர்வமதப் பிரியர், சர்வ தர்ம ஸ்தாபகர் என்றும் அழைக்கிறார்கள். இவர் தான் ஒரு பூரண அவதாரம் சர்வ வல்லமைகளும் கொண்டவர் என்று அறிவிப்புச் செய்துள்ளார். இவரில் எள்ளளவு தன்னலமோ, அகங்காரமோ, இல்லையென்றும் அவரே கூறியுள்ளார். இதை வேறு மகான்களும், கோடிக்கணக்கான மக்களும் அனுபவ வாயிலாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இவர் இந்தியாவிலுள்ள ஆந்திர மாநிலத்தில் புட்டபர்த்தி என்னும் சிறிய பின்னடைந்த கிராமத்தில் 1926ஆம் ஆண்டு உதித்தார். பெற்றோர்கள் வைத்த பெயர் சத்திய நாராயண ராஜு. அவர் கர்ப்பத்தில் இருக்கும் போதும், சிறிய பிள்ளையாக இருந்த போதும், பல அற்புதங்கள் நிகழ்ந்தன. சிறு வயதில் இவரின் தெய்வீகத் தன்மையை உணர்ந்தவர்கள் வெகு சிலரேயாவர். அவர்களுள், பாட்டனார் கொண்டம ராஜு, அயல்வீட்டு அம்மையார் கர்ணம் சுப்பம்மா, பள்ளி மாணவர்கள் சிலர், பள்ளி ஆசிரியர்கள் சிலர், மதுவரி உத்தியோகத்தர், ஆஞ்சநேயர், ரஷ்ய பிரஜை வூல்வ் மெசிங் ஆகியோர் அடங்குவர்.

**துறவு நிலை**

தனது 14ஆவது வயதில் உடமைகள், சுற்றத்தார், யாவரையும் துறந்து இறை பணியை ஆரம்பித்தார். தர்ம சீர்குலைவு உச்சக்கட்டத்தில் இருந்ததால், இறைவனுக்கே மூன்று முறை அடுத்தடுத்து அவதரிக்க வேண்டிய நிலையுள்ளதென்று கூறி 3 சாயி அவதாரங்களையும் குறிப்பட்டார். முதலாவது அவதாரம் சிரடி சாயி பாபா (சிவனின் அவதாரம்) மகாராஷ்ரா மாநிலத்தில் நிகழ்ந்தது. சத்திய சாயி பாபா (சிவ சக்தி அவதாரம்) ஆந்திர மாநிலத்தில் (23.11.1926 - 24.04.2011) நிகழ்ந்தது, பிரேம சாயி (சக்தி அவதாரம்) என்ற மூன்றாவது அவதாரம் கன்னட மாநிலத்தில் நிகழும் என்று கூறி யுள்ளார்.

பகவான் பக்தர்கள் ஈடேறுவதற்காக அவரின் நாமத்திலேயே சத்திய சாயி சேவா நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளார். இதற்காக விதிமுறைகள், கோட்பாடுகள், நோக்கம் யாவற்றையும் அவரே தந்துள்ளார்.

பகவானைப் பலர் சமூக சீர்திருத்தவாதியென்றும், சமூக சேவகனென்றும், கல்விச் சீர்திருத்தவாதியென்றும், உலக ஒற்றுமையை உண்டாக்கி, எல்லோரும் தெய்வீகமானவர்களே என்று உணர்த்துபவரென்றும் கூறுகிறார்கள்.


அநேகமானவர்கள் இவர் கடவுள் தான் என்று ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இவர் தானே பரபிரம்மம், ஆதி சக்தி, ஆதிமுதல்வர், சிவ சக்தி என்றும் கூறியுள்ளார். இதை விளக்குவதற்காக சில அற்புத நிகழ்வுகளையும் நிகழ்த்தியுள்ளார்.

---

# காற்றுக்கு விலை ஏது?

உச்சபட்ச காற்று மாசால் தவித்துக் கொண்டிருக்கும் டெல்லிவாசிகளுக்குச் சுத்தமான ஒக்சிசனை சுவாசிக்கத் தருகிறது 'ஆக்ஸிப்யூர்' நிறுவனம். இந்த நிறுவனத்தின் உரிமையாளர் 26 வயதே ஆன ஆர்யவீர் குமார். டெல்லியின் தற்போதைய அளவுக்கதிகமான மாசு ஆர்யவீர் குமாரின் தொழிலுக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. சுத்தமான ஒக்சிஜனை விலைகொடுத்து சுவாசிப்பதற்கு செலவு அதிகம் என்றாலும், மக்கள் அதிக அளவில் இந்த நிறுவனத்தை நாடத் தொடங்கியிருக்கிறார்கள் என்ற செய்தியின் மூலம் விடயத்தின் தீவிரத்தைப் புரிந்து கொள்ளலாம்.

முழுக்க முழுக்க சுத்தமான ஒக்சிஜன் நுரையீரலுக்குப் பலத்த சேதத்தை விளைவித்து இறப்பை ஏற்படுத்திவிடக்




கூடும் என்பதால், மூக்குக்கு அடியில் ஒரு சிறு குழாயைப் பொருத்தி, அதிலிருந்து வரும் ஒக்சிஜன் வளிமண்டலக் காற்றுடன் சேர்ந்தே மூக்கினுள் செல்வதுபோல் வடிவமைத்துள்ளார்கள்.

15 நிமிடங்கள் ஒக்சிசனைச் சுவாசிக்க இலங்கை மதிப்பில் 750 ரூபாவில் இருந்து ஆயிரம் ரூபா வரையில் பெறப்படுகின்றது. 'தண்ணீரை யாரும் விலை கொடுத்து வாங்குவோம் என்று சில ஆண்டுகளுக்கு முன்பு நினைத்துப் பார்த்திருப்போமா? அப்படித்தான் இதுவும்' என்கிறார் ஆர்யவீர்குமார். ஆனால், இது நல்ல சகுனம் அல்ல!

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மீண்டும் தொடங்கும் குடும்ப ஆட்சி

மன்னராட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் அது வேறு வடிவில் தற்போது வரையும் இலங்கையில் தொடர்கின்றது. குடும்ப ஆட்சியாக, ஒரே தரப்பினரே நாட்டை ஆட்சி செய்கின்ற துர்பாக்கிய நிலை மீண்டும் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கை அரசியலில் காலம் காலமாக இந்த நிலமை காணப்பட்டுள்ளது. சேனநாயக்க, பண்டாரநாயக்க குடும்ப ஆட்சியைக் கண்ட இலங்கைக்கு ராஜபக்சாக்களின் குடும்ப ஆட்சி 2005ஆம் ஆண்டு அறிமுகமானது. மகிந்த ராஜபக்ச அரச தலைவராகத் தெரிவானதும், அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய கோத்தபாய பாதுகாப்பு அமைச்சின் செயலராகவும், பசில் ராஜபக்ச அமைச்சராகவும் தெரிவானார்கள். அவர்களது குடும்ப ஆட்சி, போர் வெற்றியுடன் இன்னமும் கூடியது.

2010ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச மீண்டும் வெற்றி பெற்றதும், அதன் பின்னரான பொதுத் தேர்தலில் அவரது புதல்வர் நாமல் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மற்றொரு சகோதரரான சமல் ராஜபக்ச சபாநாயகராகினார். ராஜபக்சாக்களின் குடும்பத்துக்குள் நாட்டின் ஆதிக்கம் அடங்கிப்போனது. இந்தக் குடும்ப ஆட்சியால் விரக்தியுற்றுதான் 2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலில் அவர்களை குடும்பத்துடன் மக்கள் மெதனமுல்லவுக்கு அனுப்பி வைத்தனர்.

தமது தோல்வியிலிருந்து இனவாதம் என்ற ஆயுதத்தை கையிலெடுத்து மீண்டு மீண்டும் வந்துள்ளனர் ராஜபக்சாக்கள். இப்போது கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரது அண்ணன், மகிந்த ராஜபக்ச ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இப்போது அவரை கோத்தபாய, தலைமை அமைச்சராக்கினார். குடும்ப ஆட்சி இனிவராது, தினேஸ் குணவர்தன தலைமை அமைச்சராக நியமிக்கப்படப் போகின்றார் என்று தகவல் வெளிவந்திருந்தது. ஆனாலும் அதை எல்லாம் பொய்யாக்கி நாம் மீண்டும் குடும்ப ஆட்சியைத்தான் நடத்தப் போகின்றோம் என்பதை ராஜபக்சாக்கள் அடுத்தடுத்து நிரூபித்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டார். நேற்று அவரது மற்றொரு சகோதரரான சமல் ராஜபக்ச அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டின் மிக முக்கிய பதவிகள் இரண்டையும் அண்ணனும், தம்பியும் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்த அரசு குடும்ப ஆட்சியை மையப்படுத்தித்தான் நகரப் போகின்றது. இதைத்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது, ராஜபக்சாக்கள் பழைய பல்லவியைத்தான் பாடப்போகின்றனர். அவர்கள் குடும்ப ஆட்சியைத்தான் நிலைநாட்டப் போகின்றனர். அவர்களை விரட்டியடிப்போம் என்று கூறியிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்கவின் கூற்று உண்மைதான். ஆனாலும், இப்போதைய சூழலில் இந்தக் குடும்ப ஆட்சியை ரணிலால் விரட்டியடிக்க முடியுமா என்பது கேள்விக்குறியே. அவரது கட்சிக்குள்ளே எழுந்துள்ள மோதல்களை சமாளிக்கவேண்டும். கட்சியின் தலைமைப் பதவியை தக்கவைக்கவேண்டும். இவையெல்லாவற்றுக்கும் பின்னரே, ராஜபக்சாக்களை விரட்ட முடியும்.

கடந்த காலங்களில் இவ்வாறான சவால்கள் வந்தபோதெல்லாம் அவற்றை தூக்கிக் கடாசி முன்னேறியவர் ரணில். அதனால் இப்போதும் தனது நரிப்புத்தியை காண்பித்து மீண்டும் மேலெழுந்துவருவார் என்று எதிர்பார்க்கலாம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தலைமையிலான கூட்டு வெற்றி பெற்றால், இந்தக் குடும்ப ஆட்சியின் ஆதிக்கம் மேலும் பலமடையும். அதற்கு இடமளிக்கக் கூடாது.



# கோத்தாவின் ஆட்சி எந்தத் திசையில்?

இந்துமதி

கோத்தபாய ராஜபக்ச நாட்டின் தலைமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டார். அரசியல் முன் அனுபவம் எதுவும் இல்லாத அவர் நாட்டை வழிநடத்திச்செல்லவேண்டிய பெரும்பொறுப்பையும் சுமந்து நிற்கின்றார்.

வடக்கையும், கிழக்கையும் தவிர்த்துப்பார்க்கும்போது நாட்டின் ஏனைய பிரதேசங்கள் அனைத்திலும் கோத்தபாயவுக்குச் செல்வாக்கு இருந்ததை அவதானிக்க முடிந்தது குறிப்பாக சிங்கள மக்கள் அவருக்குத் தமது அமோக ஆதரவை வழங்கியுள்ளனர். சஜித் பிரேமதாசவும் சோடை போகாத வகையில் போட்டியிட்டதை மறுப்பதற்கில்லை. ஆனால் உரிய இலங்கை அடைவதற்கு அவரால் முடியவில்லை.

### வடக்கு - கிழக்கில் கோத்தாவுக்குத் தோல்வி

வடக்கிலும், கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் தமது அரசியல் தலைமையின் ஆணையை முற்றுமுழுதாக நிறைவேற்றியுள்ளனர். இதைக் கூட்டமைப்புக்குக் கிடைத்த பெருவெற்றியாகக் கருத முடியும். ஆனால் அந்த மக்களை எதிர்காலத்தில் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கூட்டமைப்புக்கே உள்ளது.

மகிந்த தரப்பு 2010, 2015, 2019 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களால் முற்றாகவே நிராகரிக்கப்பட்டதை மறுக்க முடியாது. இதற்கு இறுதிப் போரில் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்களே காரணமாகிவிட்டன. அவை அவர்களின் மனங்களிலிருந்து அழியும் வரையில் இந்த நிலை தொடரவே செய்யும். புதிய அரச தலைவர் தமிழர்களின் மனங்களை வெல்வாரா? அல்லது மேலும் வெறுப்பை வளர்ப்பாரா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். குறிப்பாக அவரது எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்தே இதைத் தீர்மானிக்க முடியும். குறிப்பாக இனவாதம் தலைதூக்குவதற்கு அவர் அனுமதிக்கவே கூடாது.

சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து நாட்டின் நிலைமை மோசமாகவே போய்க் கொண்டிருக்கின்றது. 30 ஆண்டுகளாக இடம்பெற்ற கொடிய போர் நாட்டை மிக மோசமான கட்டத்துக்கு இட்டுச் சென்று விட்டது. மனித உயிர்கள் மட்டுமல்லாது நாட்டின் அபிவிருத்தியும் போரினால் அழிக்கப்பட்டதால் மக்கள் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர். இதை ஈடுசெய்தவற்கான முயற்சிகள் திருப்திகரமாக இடம்பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மாறிமாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் தமது சொந்த நலன்களைப் பேணுவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனரே தவிர நாட்டைப்பற்றி எவருமே சிந்திப்பதாகத் தெரியவில்லை.

போரினால் சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தாக்குதல்கள் இடம்பெற்றபோது அவர்களும் பாதிக்கப்படவே செய்தனர். ஆனால் மிகமோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள் தமிழ் மக்கள்தானென்பது மறுக்க முடியாத உண்மையாகும் தமிழர்களின் உரிமைக்கான போராட்டம் நாடுகள் பலவற்றின் உதவியுடன் நசுக்கப்பட்ட அதேவேளை தமிழர்களின் இருப்பும் அசைத்துப்பார்க்கப்பட்டுவிட்டது. தற்போது இதிலிருந்து விடுபடுவதற்கு வழிதெரியாமல் தமிழர்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர்.. அரசை நம்பியிருந்த தமிழ்த்தலைமைகள் செய்வதறியாத நிலையில் கைகளைப் பிசைந்து நிற்கின்றனர்.

தற்போது அனைவரது கவனமும் புதிய அரச தலைவர் பக்கமே திரும்பியுள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் அவர் எதைச் செய்யப் போகின்றாரென்ற கேள்வியும் அவர்களின் மனங்களில் ஏழாமலில்லை.

### குடும்ப ஆட்சி தலைதூக்குகிறதா

கோத்தபாய அரசதலைவர் பதவியை வகித்தாலும் அரசியல் ரீதியாக அவரைப் பின்னால் இருந்து இயக்குகின்ற சக்தியாக மகிந்த ராஜபக்சவே இருக்கப் போகின்றார் மேலும் மகிந்தவின் குடும்ப உறுப்பினர்களில் பலர் ஆட்சியதிகாரங்களில் பங்கு கொள்ளப்போகின்றனர். அதுமட்டுமல்லாது மகிந்த தரப்பின் மீதான குற்றச்சாட்டுக்கள் கிடப்பில் போடப்படுவதற்கான சந்தர்ப்பமும் நிறையவே உள்ளது.

# தமிழ்த் தலைமை சாணக்கியத்துடன் செயற்பட வேண்டிய தருணமே இது!

■ சேரலாதன்

தமிழர்களுக்குச் சார்பான கருத்துக்களைமகிந்தமற்றும்கோத்தபாய ஆகியோர் வெளியிட்டுள்ளனர். அரசதலைவர்தேர்தலில்தமிழர்களின் வாக்குகள் கோத்தபாயவுக்குக் கிடைக்காத நிலையிலும் அவர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளமை தொடர்பாகப்பொறுத்திருந்துதான்பார்க்கவேண்டும். நடந்து முடிந்த தேர்தலில் சிங்கள மக்களை ஒன்றுதிரட்டி அவர்களின் வாக்குகளைப்பெறுவதற்கானமுயற்சிகளில் மகிந்த தரப்பினர் ஈடுபட்டிருந்தமை தற்போது தெரிய வந்துள்ளது.

கடந்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபாலசிறிசேனவெற்றிபெறுவதற்குத் தமிழர்களின் வாக்குகள் பெரிதும் உதவின.இந்தமுறையும்அவ்வாறானதொரு நிலைஏற்படுமென்றகணிப்புநிலவியது. ஆனர்ல் சிங்கள மக்கள் இந்தக் கணிப்பைமுற்றாகவேநிராகரித்துவிட்டனர். தமதுவாக்குகளைக்கோத்தபாயவுக்கு அள்ளி வழங்கியதன் மூலமாக அவரை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றுவிட்டனர். இதைஆமோதிக்கும் வகையில் சிங்கள மக்களே தம்மைப் பதவியில் அமர்த்தியதாக கோத்தபாய தமதுப்தவியேற்புநிகழ்வின்போதுகூறி விட்டார்.

**இனவாதத்தால் தோற்றார் சஜித்**

சஜித் பிரேமதாசவின் தோல்விக்கான காரணங்கள்தற்போதுமெல்லமெல்ல வெளிவரஆரம்பித்துவிட்டன. தமிழர்களின் வாக்குகளே தேர்தலின் வெற்றி தோல்வியைத்தீர்மானிக்கப்போவதாக வெளிவந்தசெய்திகள் இனவாதசாயம் பூசப்பட்டுசிங்களமக்களிடம்கொண்டு செல்லப்பட்டன. ஒரு சிங்கள பௌத்த நாட்டில் அதன் தலைவரைத் தெரிவு செய்கின்றசக்தியாகத்தமிழர்கள் இருப்பது? என்ற கேள்வி சிங்கள தேசமெங்கும் எழுந்தது. இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் முதன்மைத் தமிழ்த் தலைவர்களின் அறிவிப்புக்கள் அமைந்து விட்டன.

அதுமட்டுமல்லாதுஐ.தே.கவின்தலைமையும் அங்குள்ள முக்கியமான சிலரும் சஜித்தின் வெற்றியை விரும்பவில்லை என்பது தற்போது தெரிய வந்துள்ளது. இவற்றையெல்லாம் மகிந்த தரப்பு தமக்குச் சாதகமாக்கிக் கொண்டது. தேர்தலில்வெற்றியையும்பெற்றுக் கொண்டது.

தாம் கோத்தபாயவுக்கு வாக்களிக்காததால் தமக்கு என்ன நேருமோ என்ற அச்சஉணர்வுதமிழர்கள்மற்றும்முஸ்லிம்களிடம் எழுவது இயல்பான ஒன்றுதான். இதைப்போக்கி அவர்களிடம் தெளிவைஏற்படுத்தவேண்டியதுபுதிய அரச தலைவரின் தலையாய கடமையாகும். சொல்லில்மட்டுமல்லாதுசெயலிலும்இதுவெளிப்படுத்தப்படவேண்டும். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு எதையும் வழங்கவில்லை. வடக்குக்கிழக்கில்வாழ்கின்ற தமிழர்களின் மிகப்பெரிய அரசியல் சக்தியாக விளங்குகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு அரசியலைக் கைவிட்டுஇணக்கஅரசியலைநடத்திய போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. கடந்தஅரசுவாக்குறுதிகளை வழங்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து காலத்தைக் கடத்தி வந்தது. அரச தலைவர் தேர்தலில் மகிந்த தரப்பின்மீதானஅதிருப்தியின்வெளிப்பாடாகவேசஜித்துக்குக்கிடைத்ததமிழர்களின்வாக்குகளைக்கருதவேண்டும். இதைரணில்தலைமையிலானஅரசுக்குத் தமிழர்கள் அளித்த ஆதரவாக ஒருபோதுமே கருதிவிட முடியாது.

> தமிழ் அரசியல் தலைமை தற்போதைய இக்கட்டான சூழ்நிலையைத் திறம்படக்கையாள வேண்டுமென்றால் சாணக்கியத்தைக் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும்

தற்போது புதிய அரசியல் அத்தியாயம் ஒன்று நாட்டில் ஆரம்பித்துள்ள நிலையில் தமிழர்கள் அதற்கேற்றால் போன்று தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் புதிய அரச தலைவர் ஐந்து ஆண்டுகளுக்குத் தமது பதவியில் தொடரமுடியும். ஆனால் அரசமைப்பில் மாற்றங்கள் இடம்பெறுமானால் இதிலும் மாற்றங்களுக்கான சாத்தியம் உள்ளது. ஆகவேஇன்னமும்சிலஆண்டுகளுக்குஅரசதலைவரேநாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்றார். இதில் தமிழர்களின் தலைவிதியும் அடங்குகின்றது.



**தமிழர்களுடையபிரதிநிதியாக கூட்டமைப்புசெயற்படவேண்டும்**

கூட்டமைப்புபுதியஅரசியல்அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கப்போவதாக வெளிவந்தஅநாமதேயச்செய்திகூட்டமைப்புக்கு எதிரானவர்களுக்கு வாய்ப்பாகஅமைந்துவிட்டது. அதுமட்டுமல்ல சிலதரக்குறைவானஊடகங்கள்கூட்டமைப்பையும், அதன் தலைவரையும் தரக்குறைவாக விமர்சனம் செய்ததையும் காண முடிந்தது. இவற்றையெல்லாம் கூட்டமைப்பு பொருட்படுத்தத் தேவையில்லை. ஆனால் அதன் எதிர்காலச்செயற்பாடுகள்தமிழ்மக்களுக்கு ஆக்கபூர்வமான நன்மைகளை அளிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து எதுவுமில்லை.

அதுமட்டுமல்லாது தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில்கூட்டமைப்பின்நகர்வுகள்அமைந்திருத்தல் வேண்டும். கடந்த அரசுடன் இணக்க அரசியல் செய்தும் கூட்டமைப்பு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப்பெற்றுத்தரவில்லைஎன்றஆதங்கம்தமிழர்களிடம்நிறையவேஉள்ளது. இது வெறுப்பாக மாறக்கூடிய அபாய நிலையொன்றும் தோன்றக்கூடும். ஆகவே இதைத்தவிர்ப்பது அவசியமானதொன்று. தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் மக்களிடையே கூட்டமைப்புக்கு எதிரான மனப்போக்கை மக்களிடம்வளரவிட்டால்தேர்தல்வெற்றியை அது வெகுவாகப்பாதித்துவிடும். ஆகவே கூட்டமைப்பில் உள்ளவர்கள் தான்தோன்றித்தனமான வகையில் கருத்துக்களைவெளியிடுவதைஉடனடியாகவேதவிர்த்துக்கொள்ளவேண்டும். அரசியல் சாணக்கியம் இல்லாத அரசியல்வாதிகளால்எதையுமேசாதித்துவிட முடியாது. சாணக்கியம் என்பது தமிழர்களுக்கும் பொருந்தும் ஆகவே தமிழ் அரசியல் தலைமை தற்போதைய இக்கட்டான சூழ்நிலையைத் திறம்படக் கையாளவேண்டுமென்றால்சாணக்கியத்தைக் கையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலமாக எதையாவது சாதித்துவிட முடியும். ■

**டெங்கு நோய் பற்றி உங்களுக்குத் தெரியுமா?**



**சுற்றாடலில் காணப்படும் தேவையற்ற நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருள்கள்**

எமது வீட்டுச் சுற்றாடலில் எங்களால் எறியப்படுகின்ற, போடப்படுகின்ற நீர் தேங்கிநிற்கக்கூடிய பொருள்கள் (சிரட்டை, பிளாஸ்ரிக் பொருள்கள், ரயர்....) அப்புறப்படுத்தல் வேண்டும். இதற்காக நாம் தினமும் எமது சுற்றாடலை அவதானித்தல் வேண்டும்.

*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

# யாழ். மாநகருக்குள் அதிகரிக்கும் டெங்கு

## ஒரு நாளில் மட்டும் 35 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாண மாநகரப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் திடீரென அதிகரித்துச் செல்கின்றன. கடந்த வியாழக்கிழமை ஒரு நாளில் மட்டும் 35 பேர்வரை டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனவே குடியிருப்பாளர்கள் டெங்கு ஆபத்தில் இருந்து விடுபடுவதற்கு விழிப்பாக இருக்க வேண்டும்என்றுசுகாதாரப்பிரிவினர் வேண்டுகோள் விடுத் துள்ளனர். இந்த மாதத்தில் நேற்று வரைக்குமான காலப்பகுதியில் சுமார் 150 பேர் வரை டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாநகரப் பிரதேசத்தில்டெங்கின்தாக்கம்அதிகரித்துச் செல்வதை அடுத்து அதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுகாதாரப்பிரிவினர்தினமும்மாநகரப் பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று குடியிருப்புக்களைச் சோதனையிட்டுக் கண்காணிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கூடுதலான டெங்கின் தாக்கம் காணப்படும் இடங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது மழை காலம் ஆகையால் நுளம்புக் குடம்பிகளில் பெருக்கம்அதிகரித்துச்செல்கின்றன. நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் குடியிருப்பாளர்கள் தமது சுற்றுச் சூழல்களைத் துப்பரவாக வைத்திருக்க வேண்டும்.

அதனை விடப் பாடசாலை மாணவர்கள் டெங்குத் தொற்றில் இருந்துபாதுகாப்பதற்குப்பாடசாலைச் சுற்றாடல்களைத் துப்புரவு செய்ய வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் பாடசாலைகளைக் கேட்டுள்ளனர்.

பொது நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்பினர், கோவில் நிர்வாகத்தினர் போன்றோர் தமது சுற்றுச் சூழல்களை நுளம்பு பரவாத வண்ணம் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் எனவும்அறிவுறுத்தப்பட்டுள்ளது. டெங்கு மற்றும் ஒருவித வைரஸ் காய்ச்சலின்தாக்கம்அதிகரித்துச் செல்கின்றன. எனவே மக்கள் அதற்கான சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்குமாறுசுகாதாரப்பிரிவினரால் கோரப்பட்டுள்ளது. (க-17)

## பாதீட்டு அறிக்கை மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், நவ. 23

மானிப்பாய் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பாதீட்டு அறிக்கை மக்கள் பார்வைக்குவைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம்5ஆம்திகதிவரை அறிக்கைபொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

இதனை அலுவலக நேரத்தில் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும், எமது சபையின் பொது நூலகங்களிலும் பார்வையிடலாம் என்று தவிசாளர் அறிவித்துள்ளார். (க)



## போக்குவரத்து விதிகளைமீறிய சாரதிகளுக்கு தண்டம்

சாவகச்சேரி, நவ. 23

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய 18 சாரதிகளுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று சாவகச்சேரிநீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம்விதிக்கப்பட்டது. சாரதிய அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வாகன வரிப்பத்திரம் ஆகியவையின்றி வாகனம்செலுத்தியசாரதிக்கு 52 ஆயிரத்து ஐநூறு ரூபாவும், திகதி காலாவதியான சாரதிய அனுமதிப்பத்திரத்துடன் வாகனம் செலுத்திய சாரதிக்கு 25 ஆயிரம்ரூபாவும், மேலும் ஒரு சாரதிக்கு12ஆயிரத்து500 ரூபாவும், மற்றொருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும், 14 சாரதிகளுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 35 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## கொழும்புத்துறையில் 12 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள்

யாழ்ப்பாணம், நவ. 23



யாழ்ப்பாணம் மாநகர சுகாதாரப் பிரிவினரால் கொழும்புத்துறைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் நுளம்புக் கட்டுப்பாட்டுநடவடிக்கையின்போது, 12 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் இனம் காணப்பட்டன.

இந்தக் குடியிருப்பாளர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை மட்டும் 420வரையிலானகுடியிருப்புக்கள்சோதனையிடப்பட்டன. இந்தப் பகுதியில் டெங்கின் தாக்கம் அதிகரித்துக்காணப்படுவதைஅடுத்து திடீர்நுளம்புக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. வீடுவீடாகமேற்கொள்ளப்பட்டசோதனை நடவடிக்கையின்போது12வீட்டுச்சுற்றாடல்களில் நுளம்புக் குடம்பிகள் இனம் காணப்பட்டன. அதனை விட 22 வரையிலான வீட்டுச் சுற்றாடல் போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்டதால், அவற்றுக்குச்சிவப்பு அறிவித்தல்வழங்கப்பட்டுஉடனடியாகத்துப்புரவுசெய்யுமாறும்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ளதால் குடியிருப்பாளர்கள்மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். எனவே சுற்றாடல்களை சுகாதாரமுறைப்படிவைத்திருக்குமாறும்அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

## பனைகளை துண்டாக்கிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

கிளிநொச்சி, நவ. 23

அனுமதிப்பத்திரம் இன்றி வீட்டில் வைத்து பனைமரங்களைத் துண்டாக்கிய குற்றச்சாட்டில் நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாகப் பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபரிடமிருந்து 15 மரத்துண்டுகளையும் கைப்பறியுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத்தகவலை அடுத்து கிளிநொச்சி, பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இத்தாவில் அரசர்கேணி பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டார்.

மேலதிக விசாரணையின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகப் பளை பொலிஸ் நிலையத்தகவல்கள்தெரிவிக்கின்றன. (ஐ-6)





## அடிக்கல்நடும்நிகழ்வு

கரணவாய், நவ. 23

இமையாணன் அ.த.க வித்தியாலயத்தில் சரஸ்வதி சிலைஅமைப்பதற்கானஅடிக்கல்நடும்நிகழ்வுநேற்று இடம்பெற்றது.

பாடசாலையின் பழையமாணவர்களால் குறித்த சரஸ்வதி சிலை அமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் வித்தியாலய அதிபர் இ. சிவசங்கர், பழைய மாணவர் சங்கத்தலைவர் சி வசந்தகுமாரர் உட்பட பாசாலைஆசிரியர்கள், பழையமாணவர்எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ-108)

## கடவைக் காப்பாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும்

வடக்கு - கிழக்கு இணைந்த சங்கம் கோரிக்கை

வவுனியா, நவ. 23

தொடருந்துக் கடவைக் காப்பாளர்களுக்கு புதிய ஆட்சியிலாவது தீர்வுகள் கிடைக்கவேண்டும் என்று வடக்கு- கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் ரொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாடு முழுவதும் 2ஆயிரத்து 64 ஊழியர்கள் தொடருந்துக் கடவைக் காப்பாளர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். எமது பணிக்கு நிரந்தர நியமனம் கிடைக்காத நிலையில் வெறும் 250 ரூபா சம்பளத்தில் சிரமப்பட்டு கடந்த 7 வருடங்களாக சேவை செய்து வருகிறோம்.

எமக்கான நிரந்தர நியமனம், மற்றும் சம்பள அதிகரிப்புத் தொடர்பாகக் கடந்த அரசுக்குப் பலமுறை தெரிவித்தும் அது தீர்க்கப்படாமல் அடிமைகளைப் போலவே நாம் நடத்தப்பட்டோம்.

எமக்கான தொழில் பாதுகாப்பு இல்லாத நிலையில் நேற்று முன்தினம் கூட ஹட்டன் மல்லிகைப்பூ பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் கடமையின் போது உயிரிழந்துள்ளார்.

வருடாந்தம் இவ்வாறு விபத்துக்களும் இறப்புக்களும் தொடர்கின்றன. எனினும் நிரந்தர நியமனம் இல்லை. புதிய அரசதலைவர் ஒருவர் ஆட்சிக்கு வந்துள்ளார். அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவருடைய ஆட்சியில் நாடு சுபீட்சமடைந்து, மக்களுக்கு விடுதலை கிடைத்து அடிமைப்படுத்தப்பட்டு, அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் வாழ்வில் ஒளி பிறக்கும் என்று ஏங்குகின்றோம்.

அரசதலைவர் தேர்தலுக்கு முன்னர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நேரடியாகச் சந்தித்து எமது பிரச்சினைகள் தொடர்பாக கூறியிருந்தோம். அவற்றைத் தீர்ப்பதாக எமக்கு வாக்குறுதியளித்திருந்தார். தற்போது அவர் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார். எனவே எமக்கு வாக்குறுதியளித்தபடி எமக்குத் தீர்வைப் பெற்றுதரவேண்டும். எமது எதிர்பார்ப்பு அது- என்றுள்ளது. (கு-110)

### பசுமைச் சூழலைப் பேணுவதற்காக

## நாடு முழுவதும் 10 இலட்சம் மரக்கன்றுகள் நடுகை

வவுனியா, நவ.23

பசுமைப் போர்வையை மீண்டும் புத்தாக்கம் செய்வதற்கும், எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்த ஒரு சூழலை உருவாக்கும் நோக்குடனும் மரக்கன்றுகள் நடுகை செய்யும் செயற்றிட்டம் வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

'எலயான்ஸ் பினான்ஸ்' நிறுவனத்தின் முக்கோட்பாட்டுத் தத்தவத்துக்கு அமைவாக, பசுமைச் சூழலைப் பாதுகாப்பதற்கும், புவியின் தற்ப வெப்ப நிலையை நிலையான தன்மையில் பேணிப் பாதுகாக்கவும், இன, மத, மொழி என்பனவற்றைக் கடந்து ஒற்றுமையை நிலைநாட்டும் நோக்குடனும், பத்து இலட்சம் மரக்கன்றுகளை நாடளாவிய ரீதியில் முப்படையினருடன் இணைந்து நாட்டுவதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வவுனியா சிதம்பரபுரம் கிறிஸ்தவ ஆலயத்தில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

குறித்த நிறுவனத்தால் இரண்டாவது தடவையாகவும் இவ்வருடத்தில் மரநடுகை மாதத்தை முன்னிட்டு பத்து இலட்சம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள் என.

'எலயான்ஸ் பினான்ஸ்' நிறுவனத்தின் வவுனியா கிளை முகாமையாளர் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் நிறுவனத்தின் ஊழியர்கள், ஆலய மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (கு)



வவுனியா பூந்தோட்டம் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய வளாகத்தில் நேற்று மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. (க-110)

## வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம் நவ. 23

யாழ்ப்பாணம் தீபம் கல்வி நிலையத்தின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

மூத்த ஆசிரியர் தி. வேந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பொருளியல் துறை விரிவுரையாளர் லோசன் றெஜினோல்ட் மற்றும் அல்லைப்பிட்டி பராசக்தி அதிபர் சேவியர் சுவைனஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வுகள் யாவும் தீபம் கல்வி நிலையத்தின் நிர்வாக இயக்குநர் கோபிநாத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றன. (ஐ-104)


## மன்.உயிலங்குளம் பகுதியில் பிள்ளையார் சிலை திருட்டு

மன்னார், நவ. 23

மன்னார் உயிலங்குளம் பகுதியில் பிள்ளையார் சிலை திருடப்பட்டுள்ளதாக இந்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மன்னாரில் தொடர்ச்சியான இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக மத முரண்பாடு களைத் தோற்றுவிக்கும் வண்ணம் சில விஷமிகள் செயற்பட்டு வருகின்றனர் என்று இந்து மக்கள் குற்றஞ்சாட்டினர்.

மன்னார் மதவாச்சி முதன்மை வீதியில் உயிலங்குளம்வட்டுப்பித்தான் மடு கிராமத்துக்குச் செல்லும் சந்தியில் நீண்டகாலமாகக் கண்ணாடிப் பேழைக்குள் வைத்து வழிபட்டு வந்த பிள்ளையார் சிலையே நேற்றுமுன் தினமிரவு திருடப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



காலை மற்றும் இரவு நேரத்தில் சந்தியில் உள்ள பிள்ளையார் சிலைக்கு விளக்கேற்றப்படுவது வழமை. நேற்றுமுன்தினமிரவு பத்து மணிவரை விநாயகர் சிலை இருந்தது. அதன் பின்னரே அது திருடப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போது அதில் விநாயகர் படம் ஒன்றை வைத்து வழி படுவதாகவும் தெரிவித்தனர். (கு-213)

## விபுலானந்தாக் கல்லூரியின் விபுலம் சஞ்சிகை வெளியீடு

வவுனியா,நவ.23

வவுனியா, விபுலானந்தா கல்லூரியின் விபுலம் சஞ்சிகை வெளியீடும், பரிசளிப்பு விழாவும் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் நேற்று நடைபெற்றன.

விபுலானந்தா கல்லூரியின் சாதனைகளைத் தாங்கியவாறு 7 ஆவது விபுலம் சஞ்சிகை இந்த நிகழ்வில் வெளியிடப்பட்டது. நூலின் முதற்பிரதியை பாடசாலை அதிபரிடம் இருந்து உதவி மாவட்டச் செயலர் நா.கமலதாசன் பெற்றார். நிகழ்வில் இவ்வாண்டு கோட்ட, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் சாதனைகளைப் படைத்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும், கேடயங்களும் வழங்கப்பட்டன.

அதிபர் பொன்.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில், வவுனியா தெற்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா நகரசபை உறுப்பினர், கோட்ட கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-110,ரி4)



# நீண்ட காலத்துக்குப் பின்னர்
# குத்தகைக்கு விடப்பட்டது சாவகச்சேரிபொதுச்சந்தை

சாவகச்சேரி,நவ.23

**சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு விடுவது தொடர்பான நீண்டகால இழுபறிகளைத் தொடர்ந்து சந்தையை குத்தகைக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரசபை அந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.**

சந்தையை குத்தகைக்கு வழங்க கேள்வி அறிவித்தல் விடுக்கப்பட்டு சபையால் தீர்மானிக்கப்பட்ட தொகையை விட ஆயிரம் ரூபா அதிகம் வைத்து கிடைத்த கேள்வித் தொகைக்கு வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சந்தை குத்தகைக்கு விடப்பட வுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**பின்னணி**

சாவகச்சேரி கிராமச் சங்கமாக இயங்கிய காலம் முதல் நகர சபையை ஆட்சியமைத்த அரசியல் கட்சிகள்ஒவ்வொன்றும்சந்தையை குத்தகைக்கு விடுவதை எதிர்த்தன. சந்தையில் வரி வசூலிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுசந்தையைசபையே நடத்தி வந்தது. சந்தை வருமானத்தில்சபையின் அபிவிருத்திவேலைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர்நகரசபைக்குத் தெரிவான ஒரு பிரிவினர் சந்தையைக் குத்தகைக்கு விட வேண்டும் என விடாப்பிடியாக நின்றனர். சபை அமர்வுகளில் பலத்த வாக்கு வாதங்களும் இடம்பெற்றிருந்தன. வெற்றிடமாகஉள்ளவரிவசூலிப்பாளர் பதவிகளை மீண்டும் பெறுவதற்கு மாகாண சபையிடம் கோரிக்கைவிடப்பட்டது. கடந்த மேமாதம் இடம்பெற்றசபை அமர்வின்போது சபையின்தவிசாளர், உபதவிசாளர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் சந்தையைக் குத்தகைக்கு வழங்க வேண்டும் எனத் தெரிவித்ததால் கடந்த ஜூலை மாதம் தொடக்கம் குத்தகைக்குவிடுவதெனதீர்மானிக்கப்பட்டது. எனினும்சபையின்தீர்மானத்துக்கு எதிர்ப்பு த் தெரிவித்து சந்தை வியாபாரிகள் ஒருநாள் அடையாள வியாபார புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் குத்தகைக்கு விடுவது நிறுத்தப்பட்டது.

சந்தை குத்தகைக்கு விடவேண்டும் என்ற சபை உறுப்பினர்களின் விடாப்பிடியால் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்துடன் தவிசாளர்தொடர்புகொண்டார். பிராந்திய உள்ளூராட்சிபணியகத்தினர்சபையின் செயலாளருடன் தொடர்பு கொண்டுஅவரின்அறிக்கைபெற்ற பின்னர் சந்தையைக் குத்தகைக்கு விடலாமென்றுதவிசாளருக்குஅறிவித்தனர். கடந்த அமர்வில் சந்தையைக்குத்தகைக்கு விடுவதென மீண்டும்தீர்மானிக்கப்பட்டது. கேள்வித் தொகையாக ஒரு கோடியே பத்து லட்சம் ரூபா நிர்ணயிக்கப்பட்டது. கேள்வி அறிவித்தலும் கோரப்பட்டது. நிர்ணய கேள்வித் தொகையை விட ஆயிரம் ரூபா அதிகம் வைத்துகிடைத்தகேள்வித்தொகைக்கு குத்தகைக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-9)

## தேசிய மட்ட மகளிர் முன்னேற்ற செயற்பாடு

பிரம்மகுமாரிகளின் தேசிய மட்ட மகளிர் முன்னேற்றச் செயற்பாட்டு பிரிவினர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர். எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 5 மணிக்கு மகளிருக்கான உளஆற்றல் விருத்தி தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வொன்று யாழ்ப்பாண மாவட்டத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. அந்த நிகழ்வில் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய சமூகத்தில் பல்வேறு சவால்களின் மத்தியில் குடும்ப, சமூக மற்றும் தொழில் ரீதியான வாழ்வை இளம் மகளிர் முகம்கொடுத்து வாழ வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. இதனால் இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜ யோகநிலையத்தினரின் மகளிர் முன்னேற்ற செயற்பாட்டுப்பிரிவினர் பிராந்திய ரீதியாக 30 வயதுக்குட்பட்ட நிர்வாக மட்ட தொழில்சார் மகளிருக்கான உளஆற்றல் விருத்தி தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் பிரம்மகுமாரிகளின் தேசிய மட்ட மகளிர் முன்னேற்றச் செயற்பாட்டு பிரிவினர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர் என்று பிரம்மகுமாரிகள் இராஜ யோக நிலைய மாவட்ட சேவை இணைப்பாளர் பிகு கோபி அறிவித்துள்ளார். (ஐ)

## கலை விழா

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் 26ஆவது கலை விழா இளைஞர் சங்கத்தில் இன்று இடம்பெறும். சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க தலைவர் நா. தர்மராஜா அகளங்கன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் கலாபூசணம் க. கனகேஸ்வரன், கலாபூசணம்விமலலோஜினிகனகேஸ்வரன் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

அதேவேளை பரிசளிப்பு நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கும் இடம்பெறும். (க-110)

## முன்பள்ளி ஆசிரியர்கள் வவுனியாவில்மதிப்பளிப்பு

வவுனியா,நவ.23

வவுனியாவில் முதல் முறையாக 450 க்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

வவுனியா மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்களின் கலை காலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆசிரியர்களுக்குநினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

பிரிட்டனைச் சேர்ந்த விஸ்வநாதன் யோகநாதன் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ. மயூரன், முன்பள்ளி உதவிக்க ல்விப் பணிப்பாளர் தர்மபாலன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களான பூ. சந்திரபத்மன், நா. லக்சனா, கோ. அஞ்சலா உட்பட பலர் கலந்துகொண்டனர். (க-110)







## மரநடுகை நிகழ்வு.

மன்னார்,நவ.23

மர நடுகை நிகழ்வு மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் நகர சபையின் 2019ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் 250 மரக்கன்றுகள் நடுகை செய்யும் வகையில் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் தலைமன்னார் முதன்மை வீதிஇ மன்னார் பொது மயானம் ஆகிய பகுதிகளில் மரநடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரன் டேவிட்சன் தல்லைமையில் இட்ம் பெற்ற நிகழ்வில் மன்னார் நகர சபைச் செயலர் நகர சபை உபதலைவர் நகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நடுகை செய்தனர். (ஐ-56)

## சமத்துவ பாடல் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.23

இலங்கைபல்சமயகருத்தாடல்நிலையத்தின் ஏற்பாட்டில் பல்சமய விழுமியங்களைக்கருப்பொருளாகக் கொண்ட சமத்துவ பாடல் போட்டி நடைபெறவுள்ளது.

சிறந்த பாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடகர் மற்றும் பாடகிகளுக்கான சிறப்புப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

எனவே 3 தொடக்கம் 4 நிமிடங்களுக்குள்அடங்கக்கூடிய பாடலாக்கங்களை எதிர்வரும்10ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைபல்சமயகருத்தாடல் நிலையம் 261/2 மின்சார நிலைய வீதியாழ். போதனாவைத்தியசாலைபின்புறம்யாழ்பாணம் என்னும் முகவரிக்கு அனு ப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முள்ளிக்குளம் கடற்பகுதியில் மீனவர்கள் ஐவர் கைது

யாழ்ப்பாணம்,நவ.23

முள்ளிக்குளம்கடற்பகுதியில்தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முள்ளிக்குளம்கடற்பகுதியில்வைத்துகடற்படையினரால் கடந்த புதன் கிழமை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து மீன்பிடி படகு மற்றும் 220 மீற்றர்நீளமுடையதடை செய்யப்பட்ட மீன் பிடி வலை என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவைமேலதிகசட்டநடவடிக்கைகளுக்காக மன்னார்கடல்வளபாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-71)



## இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விவரங்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், நவ.23

வடக்கு மாகாணத்தில் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விவரங்கள் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. edudept.np.gov.lk என்ற இணைய முகவரியில் ஆசிரியர்கள் விவரங்களைப் பார்வையிடலாம்.

இடமாற்றம் கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள் தங்கள் மேல் முறையீடுகளை மிக விரைவாக தங்கள் வலயங்கள் ஊடாக மேன்முறையீடு செய்யலாம்.

மேல்முறையீடு செய்யும் கால விவரங்களை இணையதளத்தில்பெற்றுக்கொள்ளலாம் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் பிரதிநிதி வோல்வின் தெரிவித்துள்ளார். (க)

# மாவீரர் தினத்தை கொண்டாட அளம்பிலில் ஏற்பாடுகள் துரிதம்

### பணிகள் நேற்று ஆரம்பம்

முல்லைத்தீவு, நவ. 23

மாவீரர் தினத்தைச் சிறப்பாகக் கடைப்பிடிக்க வென்று, முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில், கம்பங்கள் நடுகை செய்து சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதியன்று மாவீரர் நாள் இடம்பெறவுள்ள நிலையில், அதற்காகத் தாயகப் பரப்பில் காணப்படும் துயிலுமில்லங்கள் அனைத்தும் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இந்த ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தச் செயற்பாடுகளில் மாவீரர்களின் உறவினர்கள், அளம்பில் பகுதி பொது மக்கள் ஈடுபட்டிருந்தனர். மாவீரர்தின வாரம் நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதிவரை தாயகப் பரப்பில் வெகு எச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டுவந்தது. போர் நிறை வுக்குக்கொண்டு வரப்பட்ட பின்னர் அது சாத்தியமாகாத நிலை காணப்பட்டது. 2015ஆம் ஆண்டு தொடக்கம் மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப் படுவதோடு, மாவீரர்தின இறுதிநாள் நிகழ்வு மிக எழுச்சியுடன் கடைப்பிடிக்கப் பட்டுவருகின்றது. இந்த நிலையிலேயே இந்தமுறையும் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் நோக்கில் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் சில இடங்களிலுள்ள மாவீரர் துயிலு மில்லங்கள் துப்புரவு செய்யும் பணிகள் இடம் பெற்றுவருகின்றன. (கு-246)

## மாவீரர் வாரம் ஆரம்பித்தும் சிவாஜிலிங்கம் மிகஅமைதி

### இத்தனை வருடங்கள் நீடித்த விளக்கேற்றல் அறவே இல்லை என்று பலரும் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 23

தமிழீழ மாவீரர் வார ஆரம்பத்தின் முதல் நாள் தொடக்கம் இறுதிநாள்வரை பல இடங்களிலும் விளக்கேற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம், அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்ட பின்னர் கோத்தபாய ராஜபக்ச அரசதலைவரான பின்னர் விளக்கேற்றுவதை, அஞ்சலி செலுத்துவதைக் கைவிட்டுள்ளார் என்று பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு மட்டுமன்றி வடக்கில் ஏனைய மாவட்டங்களிலும் சில வருடங்களாக மாவீரர் வாரத்தின் ஏழு நாள்களும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் இந்தவருட அரசதலைவர் வேட்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தி வந்தார். இந்தமுறை அப்படியான செயற்பாடுகளில் அவர் ஈடுபடவில்லை.

என்ன தடையேற்பட்டாலும் தொடர்ந்தும் இந்த நிகழ்வுகளைக் கடைப்பிடிப்பேன் என்று சிவாஜிலிங்கம் முன்னர் பல தடவை தெரிவித்து வந்தார். அரசதலைவர் தேர்தல் பரப்புரையின்போதும் இது பற்றிச் சுட்டிக்காட்டியிருந்தார்.

மாவீரர் வாரம் நவம்பர் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை தமிழ் மக்களால் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினமும், நேற்றும் அவர் வடக்கின் எந்தவோர் இடத்திலும் விளக்கேற்றவுமில்லை, அஞ்சலி செலுத்தவுமில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (கு-105)

## ஒரே நாளில் இரு விபத்துக்கள்

யாழ்ப்பாணம், நவ.23

பருத்தித்துறை வீதியில் இருபாலை மற்றும் நல்லூர் முத்திரை சந்தியில் ஒரே நாளில் அடுத்தடுத்து இரண்டு விபத்தச் சம்பவங்கள் இடம்பெற்றன. இந்த விபத்துக்களில் உந்துருளி, முச்சக்கரவண்டிமற்றும்மூடுந்து வாகனங்கள் சேதமடைந்தன.

கடந்த வியாழக்கிழமை இரவு இந்த விபத்துக்கள் இடம்பெற்றன. நல்லூர் முத்திரைச் சந்தியில் முச்சக்கர வண்டியும் மூடுந்தும் மோதி விபத்துக்குள் ளாகின. இதில் இரண்டு வாகனங்களும் சேதமடைந்தன. வாகனத்தில் பயணித்தோர் காயம் இன்றித் தப்பித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இருபாலைச் சந்திக்கு அண்மையிலும் அன்றைய தினம் விபத்து இடம்பெற்றது. இரண்டு உந்துருளிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. அதில் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## வன்னிவிளாங்குளத்திலும் துப்புரவுப் பணிகள் தீவிரம்

முல்லைத்தீவு, நவ. 23

மாவீரர் தினத்தைச் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் நோக்கில், முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம், மாவீரர் துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வன்னிவிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் இணைந்து துப்புரவில் ஈடுபட்டனர். எதிர்வரும் 27ஆம் நாள் மாவீரர்நாள் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், தாயகப் பகுதிகளில் காணப்படுகின்ற துயிலுமில்லங்கள் துப்பரவு செய்யப்பட்டுவருகின்றன. (கு-246)





## மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணி ஆரம்பம்

வடமராட்சி, நவ.23

வடமராட்சி, கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சில நாள்களாக தொடர்ச்சியாக அந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கடந்த புதன்கிழமை இறுதியாக துப்புரவு செய்யப்பட்டது.

எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கையிலும் புலம் பெயர் தேசத்திலும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு எழுச்சியாக இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் அண்மைக் காலமாக துப்புரவு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ-70)

## பூங்காவைத் துப்புரவு செய்தோருக்கு வல்வெட்டிப் பொலிஸார் தொல்லை

### காணொலி எடுத்தபோதும் துப்புரவு நடைபெற்றது

யாழ்ப்பாணம், நவ. 23

நகரசபைக்குச் சொந்தமான பூங்கா உள்ளிட்ட பகுதிகளைத் துப்புரவு செய்ய நகரசபை மேற்கொண்ட முயற்சிக்கு வல்வெட்டித்துறைப் பொலிஸார் இடையூறு விளைவித்தனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. மாவீரர் தினத்தைக் கடைப்பிடிப்பதற்குப் பூங்கா துப்புரவு செய்யப்படுகிறது என்று தெரிவித்தே பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் உள்ள குமரப்பா புலேந்திரனின் சதுக்கம் அமைந்துள்ள பகுதி உள்ளிட்ட நகரசபைக்குச் சொந்தமான இடத்தைத் துப்புரவு செய்ய வல்வெட்டித்துறை நகர சபையினர் நேற்று நடவடிக்கை எடுத்தனர். துப்புரவுப் பணிகள் இடம் பெறுகின்றபோது அங்கு வந்த வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி துப்புரவுப் பணிகளை நிறுத்துமாறு தடைவிதித்தார் என்றும், மீறி துப்புரவு செய்தபோது பொலிஸாரை வரவழைத்து அனைவரையும் தனித்தனியே காணொலி எடுத்தார் என்றும் குற்றஞ் சாட்டப்படுகிறது. இதனால் அங்கு பதற்றமான நிலை தோற்றுவிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

"நகர சபையின் ஆளுமைக்கு உட்பட்ட பகுதி யையே நகரசபை துப்புரவு செய்தது. இந்தச் செயற் பாடு வாராவாரம் இடம் பெறுகிறது. இதற்கு பொலிஸார் தடைவிதி பதை ஏற்றுக் கொள்ள முடியாது. மாவீரர் நா வாரத்தில் துப்புரவு செ தால் அவர்கள் கேட்கலா எதுவும் செய்ய முடியாச என்று வல்வெட்டித்து நகரசபையின் தவிசாள கோ.கருணானந்தரா தெரிவித் தார். எனினு பொலிஸாருடைய இ யூறுகளுக்கு மத்தியிலு துப்புரவுப் பணிக தொடர்ந்து இடம்பெற்ற என்று மேலும் தெ விக்கப்பட்டது. (கு-21,26)

# தற்போதும் தேசிய இனப்பிரச்சினை தீவிர முரண்பாடாகவே நீடிக்கிறது

## மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சி குறித்து புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

வடக்கு, கிழக்கு, மலையக சிறுபான்மை இனங்கள் எதிர்கொள்கின்றதேசியஇனப்பிரச்சினை,நாட்டின்முதன்மை முரண்பாடாக நீடித்து வருவதையே அண்மைய அரசதலைவர் தேர்தல் முடிவுகள் யதார்த்தபூர்வமாக மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளன.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சியின்அரசியற்குழு சார்பாக அதன் பொதுச்செயலர் சி. கா.செந்திவேல் தெரிவித்துள்ளார். இதுபற்றிஅவர்அனுப்பியசெய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்கள, பௌத்த பெருமுதலாளிய ஆளும் வர்க்க சக்திகள் பேரினவாதத்தை முன்னெடுத்து, எண்ணிக்கையில் சிறுபான்மையினராகவுள்ள தேசிய இனங்களின் மீது ஒடுக்குமுறைகளை மேலும் அதிகரிக்கக்கூடியஅபாயநிலைதற்போது உருவாகியுள்ளது. தேர்தலைத் தொடர்ந்துஇடம்பெறும்வன்செயல்கள் அதை உறுதிசெய்கின்றன. இந்தத் தகாத செயல்களை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. மக்கள்விரோதசெயற்பாடுகள் தொடராதுதடுக்கப்படவேண்டும்.

கோத்தபாய ராஜபக்ச பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்று நிறைவேற்று அதிகார அரச தலைவராகத் தெரிவாகி அநுராதபுரத்தில் துட்டகெமுனுவின் நினைவிடத்தில்பதவிஏற்புநிகழ்வுநடைபெற்றுள்ளது.

அவர் ஆற்றிய உரையில், தான் அதிகமான சிங்கள மக்களின் வாக்குகளால் மாத்திரம் வெற்றிபெற்றிருக்கின்றேன் என்று சுட்டிக்காட்டியிருந்தமை, ஏற்கனவே பல்வேறு ஒடுக்குதல்களுக்குஉள்ளாகிவரும் எண்ணிக்கையில் சிறுபான்மையினரானதேசிய இனங்களைச்சேர்ந்த சாதாரணமக்களுக்குநல்லசகுனம் அல்லஎன்பதைஉணரமுடிகிறது.

தற்போது மகிந்த ராஜபக்சவின் குடும்பஆட்சிஅரங்கேறியுள்ளது. வடக்குகிழக்குத்தமிழர்,முஸ்லிம்கள், மலையகத் தமிழ் மக்கள் மத்தியிலான சாதாரண உழைக்கும் மக்களும், சமூக ஒடுக்குதல்களுக்கும் உள்ளான அடிநிலை வாழ் மக்களும் தமது பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளுக்கு எதிராகத் தூரநோக்குடையகொள்கைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்பட்டு முன்செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்.

சிங்களஉழைக்கும்மக்களுடனும், சமூக ஒடுக்குதல்களை எதிர்கொள்ளும் அடிநிலை வாழ் சிங்கள மக்களுடனும்ஒன்றிணைந்துமுன்செல்வதே குறித்த அபாயங்களை எதிர்கொண்டு வெற்றியடைய, நம் அனைவர்முன்னாலும்உள்ளஒரே மார்க்கம் என்பதையும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

நாடுபொருளாதாரநெருக்கடிகளை எதிர்நோக்கிநிற்கின்றது. கடன்பளு நாட்டு மக்கள் அனைவரையும் அமுக்கி வருகின்றது. அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் அதிகரிப்பு, வறுமை, வேலையின்மை, வீடுஇன்மை,போதியசம்பளஉயர்வு மறுக்கப்படுகின்றமை, பொதுக் கல்வி, சுகாதாரத் துறைகள் சீர்குலைக்கப்படுகின்றமை போன்ற பிரச்சினைகளுக்குத்தீர்வுகள்எவை என்ற கேள்வி எழுகின்றது. இவற்றுக்குச் சிங்கள பௌத்த பேரினவாதம் திரையாகுமே தவிர தீர்வுகளைத் தராது.

ஏனெனில், இவையாவும்இப்போது இலங்கையில் நிலவும் நவகொலணிய நவதாரள பொருளாதாரக் கட்டமைப்புடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. எனவே, நாட்டின்இறைமை, சுதந்திரம், சுயாதிபத்தியம், சுயசார்பு ஆகியவற்றை ஏகாதிபத்திய, பிராந்தியவல்லாதிக்க சக்திகளிடமிருந்து பாதுகாக்கும் துணிவு புதிய அரசதலைவருக்கு வருமா என்பதைச் சிறிது பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

ஆதலால் நாட்டின் அனைத்து உழைக்கும் மக்களும், ஒடுக்கப்படும்தேசிய இனங்களும்தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், உரிமைகளுக்காகவும் வெகுஜனப் போராட்டப் பாதையில் அணிதிரள வேண்டியதன் அவசியத்தையே தேர்தல்முடிவுதெரிவித்துநிற்கின்றது. என்றுள்ளது. (கு)

## வடக்கு ஆளுநர் செயலகத்துக்கும் பாய்ந்தது கோத்தாவின் கட்டளை

யாழ்ப்பாணம், நவ. 23

புதிய அரசதலைவர் கோத்தபாய ராஜபக்சவின் கட்டளை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கும் அறிவிக்கப்பட்டள்ளது.

புதிய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாய ராஜபக்ச அதிரடி அறிப்புக்களை வெளியிட்டு வருகிறார். அதன்படி அரச அலுவலகங்களில் அரச தலைவர் மற்றும் அரசியல் பிரமுகர்களின் ஒளிப்படங்கள் காட்சிப்படுத்துவதற்குப் பதிலாக அரசு இலட்சினை மட்டும் காட்சிப்படுத்துமாறு அண்மையில் பணித்திருந்தார். அத்தோடு வீதிகளின் பெயர்பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அரசியல் பிரமுகர்களின் ஒளிப் படங்களை அகற்றி வீதியின் பெயரை மட்டும். காட்சிப்படுத்துமாறும் அவர் கோரியிருந்தார்.

அரச தலைவர் கோத்தபாயவின் கட்டளை அரச தலைவர் செயலகத்தால்வடக்குமாகாண ஆளுநர் செயலகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## டெங்கு நோய்த் தொற்று வவுனியாவில் அதிகரிப்பு

### இதுவரை 305 பேர் பாதிப்பு கவனமாக இருக்குமாறு எச்சரிக்கை

வவுனியா, நவ. 23

வவுனியாவில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. டெங்குத் தொற்றால் இதுவரை 305 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் மேற்பார்வைப் பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் கடந்த 3 மாதங்களாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த 3 மாதங்களில் 305 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கைக் கட்டுப்படுத்தும் விதமாக தொடர்சியான கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வுகள் இடம்பெறுகின்றன.

வவுனியா நகரம், இறம்பைக்குளம், சூசைப்பிள்ளையார் குளம், ராணி மில் வீதி, வைரவ புளியங்குளம், கற்குழி, தேக்கவத்தை, உள்வட்ட வீதி, சந்தைச் சுற்றுவட்டம் போன்ற பகுதிகளில் டெங்கு நுளம்புப் பெருக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்றார்.

வடக்கில் மட்டுமன்றி நாடு முழுவதும் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் இந்த நிலை தீவிரமாகவே உள்ளது. யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்றால் இதுவரை இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் காய்ச்சலாலும் சிலர் இறந்துள்ளனர். எனவே பொதுமக்கள் ஒவ்வொருவருமே தத்தம் பகுதிகளில் டெங்கு நுளம்பு பெருகாதவாறு சுற்றாடலைப் பேணவேண்டும் என்று கண்டிப்பான அறிவுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

(கு-110,ரி4)

## திறப்பு விழாவும் நாவல் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ.23

சுப்பிரமணியம் இராசம்மா நினைவாக அவர்களது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட மணிமண்டப திறப்பு விழாவும், உயிர்வாசம் நாவல் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை குமரபுரம் முருகன் கோவில் ஒழுங்கையில் இடம் பெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு மண்டபத்திறப்பு விழாவைத் தொடர்ந்து, எழுத்தாளர் தாமரைச் செல்வியின் உயிர்வாசம் நாவல் வெளியீடு இடம்பெறும். (க)

## ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

வவுனியா,நவ.23

ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வவுனியாப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து ஒரு கிராம் 970 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.



வவுனியா பிடியாணை பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி. திஸ்சலால்த சில்வாவின் உத்தரவுக்கமைவாக வவுனியா பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி என்.வெலிகல தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் சந்தேகநபரை கைது செய்தனர்.

தேக்கவத்தைப் பகுதியை சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்டுவரும் வவுனியாப் பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர். (ஐ-110)

## சாயி பாபாவின் 94 ஆவது அவதார தினம்

யாழ்ப்பாணம், நவ.23

சத்திய சாயி பாபாவின் 94 ஆவது அவதார தின நிகழ்வு இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் விழா ஆரம்பமாகும், தொடர்ந்து கொடியேற்றம், பஜனை, நாதஸ்வர இசை, சிறப்புச் சொற்பொழிவு, வில்லிசை, இசை அர்ப்பணம் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெறும். (க)

## பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.23

ஹைஹுலுக்ஸ் பன்னாட்டு அழகுக்கலைக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே , யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா. வேதநாயகன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(க)

# தமிழர்களை வழிகாட்டத் தவறிய தமிழ் அரசியல் தலைமைகள்

## ஐங்கரநேசன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.23

சஜித் பிரேமதாசாவை எமது தமிழ்த் தலைமைகள் தேசியத் தலைவராக்க முயன்று தாங்களும் தோற்று, அரசியல் ரீதியாகத் தமிழ் மக்களையும் தோல்வியடையச் செய்து விட்டனர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மரநடுகை மாத விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் தமிழ் அரசியல் தலைவர்கள், தமிழ் மக்களுக்குச் சரியான வழிகாட்டுதலைச் செய்யத் தவறிவிட்டனர். தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக நிறுவுவதற்கு அரச தலைவர் தேர்தலில் அவர்களின் முன்னால் இரண்டு தெரிவுகள் தான் இருந்தன. ஒன்று, தேர்தலைப் புறக்கணிப்பது, மற்றையது, தமிழர்கள் சார்பாக ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது.

ஆனால், தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவுக்குப் பெருமளவு ஆதரவு இல்லாத நிலையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுவேட்பாளர் என்ற விடயத்தை முன்கூட்டியே முன்னெடுத்திருக்க வேண்டிய எமது தமிழ்த் தலைவர்கள், சிவில் சமூகம் அதை முன்னெடுத்த போது காலங்கடந்து போய்விட்டது என்று நிராகரித்து, ஒட்டுமொத்தத் தமிழ் வாக்குகளையும் சஜித் பிரேமதாசவுக்குத் திரளாகக் கிடைக்கச் செய்தார்கள். அவர்கள் தென்னிலங்கையின் அரசியல் கள நிலவரங்களைச் சரியாகக் கணிக்கத் தவறிவிட்டனர்.

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் தங்கள் இனம் சார்ந்து முடிவெடுத்து, ஒரே தேசமாகத் திரண்டு கோத்தபாயவைப் பெரு வெற்றி பெற வைத்துள்ளனர். விடுதலைப் புலிகளின் காலம் வரை தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியாக அவர்கள் இருந்தனர். இலங்கையின் அரச தலைவர் யார் என்பதைத் தீர்மானிப்பவர்களாகத் தமிழ் தரப்பு இருந்தது. ஆனால், இன்று தமிழ்த் தலைவர்களின் தவறான அணுகுமுறைகளால் தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமலேயே அரச தலைவர் ஒருவர் தெரிவாக முடியும் என்ற நிலமை ஏற்பட்டு, தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தி பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

எமது தலைவர்கள் தீர்க்கதரிசனம் மிக்கவர்களாக இருந்திருந்தால், இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி இருக்க முடியும். சிங்களக் கட்சி ஒன்றுக்குக் குவித்த வாக்குகளை தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவருக்கு வழங்கி நாங்கள் தனியான ஒரு தேசம் என்பதை நிரூபித்திருக்க முடியும். - என்றார்.

(க)

# குழு மோதல்: 6 பேருக்கு மறியல்

திருகோணமலையில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 6 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸ உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களை இன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்திய போதே சந்தேகநபர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸ உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை சமுத்திரகம பகுதியைச் சேர்ந்த 31,19,21 மற்றும் 20 வயதுடைய ஆறு பேரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களுக்கும் மற்றொரு குழுவுக்கும் இடையில் மீன் பிடி தொடர்பாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலால் திருகோணமலை கொட்டுவ வீதி பகுதியைச் சேர்ந்த 25 வயதான நிசான் குரூஸ் மற்றும் 23 வயதான பிரதீப் குமார ஆகியோர் காயங்களுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ)

# தேர்தல் முடிவால் மக்கள் அச்சமடைய வேண்டாம்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, நவ.23



எத்தனையோ பிரச்சினை களைச் சந்தித்தவர்கள் நாங்கள். அவற்றின் வடுக்களை இன்றைக்கும் சுமந்துகொண்டு இருக்கும் இனம் எங்களுடைய தமிழ் இனம். தேர்தல் முடிந்த நிலையில் என்ன நடக்கும் என்ற ஒரு அச்சத்தோடு எங்களுடைய மக்கள் வாழ்கிறார்கள். அச்சப்பட வேண்டாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

என்ன நடந்தாலும் நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். தற்போது தேர்தல் ஒன்று முடிந்திருக்கிறது. இந்த நாட்டில் இரண்டு சமூகங்கள் வேறு வேறு நிலைப்பாட்டை கொண்டவர்களாக இருக்கிறார்கள். பெரும்பான்மை இனத்தை சார்ந்த ஒருவருக்கே தமிழ் தேசிய இனம் வாக்களித்திருக்கின்றது. அதே நேரத்திலே பெரும்பான்மை இனத்தை சார்ந்த ஒருவருக்கு சிங்கள தேசம் வாக்களித்தது. இதன்மூலம் நாங்கள் இனத்துவேசம் கொண்டவர்கள் அல்ல என்பதை நிரூபித்திருக்கிறோம். நாம் எங்களுடைய தேசத்திலே நடைபெற்ற அத்தனை பிரச்சினைகளையும் மறக்க முடியாத வடுக்களாக எங்களுடைய நெஞ்சங்களிலே இன்றைக்கும் சுமந்து கொண்ருக்கிறோம் என்பது இந்தத் தேர்தலின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆட்சியாளர்கள் நிச்சயம் இதற்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்.

தேர்தல் முடிந்த நிலையில் என்ன நடக்கும் என்ற ஒரு அச்சத்தோடு எங்களுடைய மக்கள் வாழ்கிறார்கள். அச்சப்பட வேண்டாம். அச்சப்படத்தேவையில்லை. -என்றார். (எ-110)

# ஞானசாரரின் சுயரூபம் தற்போது வெளியாகிறது

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், நவ.23



ஞானசார தேரர் தன்னுடைய கடமை முடிந்து விட்டது என்றும், நடைபெறப் போகும் பொதுத் தேர்தலுடன் பொதுபலசேனாவை கலைத்துவிடப் போவதாக அண்மையில் சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்திருந்தன. இதிலிருந்து அவரது சுயரூபம் வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஞானசார தேரர் தலைமையில் தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலின் போது அதன் பின்னனியில் இவர் இருந்தார் என்பது வெளிப்படையான உண்மை. அப்போதிருந்த அரச தலைவர்கள் ஞானசாரதேரருக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சிறுபான்மை இனத்தவர்கள் மீது தனது அடாவடிகள் மூலம் இனவாதங்களைத் தூண்டிவிட்டு தனிச் சிங்கள ஆட்சியை அமைப்பதே இவரது நோக்கம் என்பது இப்பொழுது வெளிப்படையாகிவிட்டது. இவரது பின்னணியில் நின்று செயற்பட்டவர்களின் முகத்திரைகளும் வெளியாகி வருகிறது.

தேர்தல் காலத்தில் நீராவியடிப் பிள்ளையார் ஆலய சர்ச்சையில் ஞானசார தேரர் மூக்கை நுழைத்தது எதற்காக என்ற சந்தேகம் எழுகிறது?. நீராவியடி பிள்ளையார் ஆலய்த்தில் ஏற்படுத்தப்பட்ட கலவரத்துக்கு மூல காரணமான இவர் அந்த விடயத்தை வைத்து சிங்கள தேசத்தை உசுப்பேத்தி விட முயன்றிருக்கின்றாரா?.

ஒரு தேரருக்கு தேவையான எந்த ஒரு அடிப்படை நல்லொழுக்க விழுமியங்களும் இவரிடம் இருப்பதாக தெரியவில்லை.

சண்டியராகச் செயற்படும் ஞானசார தேரரை வந்திருக்கும் புதிய அரசாவது கட்டுப்படுத்துமா? என்பதை அரசு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்

இந்த நாடு தமிழ், சிங்கள மொழி பேசும் மக்களுக்கான நாடு. இரண்டு ஆட்சி மொழிகளைக் கொண்ட நாடு. உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் இனவாதி அல்லர். தமிழ் மொழிக்கான அங்கிகாரத்தை வழங்க தவறினால் அதன் உலக நீதி உங்களுக்கான பாடங்களை எதிர்காலத்தில் கற்றுத் தரும் - என்றார்.

(எ-213)

# வேட்பாளரின் செலவுகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

கொழும்பு, நவ.23

தேர்தல் நடவடிக்கைகள்ளை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கும் வேட்பாளர்கள் செலவிடக்கூடிய அதிகபட்ச நிதியை வரையறை செய்வதற்கான சட்டமூலத்தை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்றிக்கொள்ளுமாறு பவ்ரல் அமைப்பு அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதன் காரணமாக சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வது இலகுவாக அமையுமென அந்த அமைப்பால் அரச தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நடத்தப்படாது இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் விரைவில் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரச தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# கோத்தாவின் ஆதரவாளர்கள் பி.பி.சிக்கு எதிராக போராட்டம்

கொழும்பு, நவ.23
பி.பி.சி செய்தி நிறுவனம் இலங்கை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவரை 'தமிழ் இன ஒழிப்புக்கு காரணமான இராணுவத் தலைவர்' என விபரித்தமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி சுரகிமு சிறிலங்கா மற்றும் சிங்களே அபி அமைப்பு உள்ளிட்ட நான்கு அமைப்புக்கள் பிரிட்டன் தலைமை அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளன.




நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு 7 பௌத்தாலோக மாவத்தையில் உள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் பின்னர் பி.பி.சி செய்தி நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிய கடிதம் பிரிட்டன் தூதரகத்தில் கையளிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:
இலங்கை ஆயுதப் படைகளுக்கும் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்புக்கு கடந்த 17 ஆம் திகதி இலங்கையின் புதிய அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச பொறுப்பு கூறக் கூடிய இராணுவத் தலைவர் என பி.பி.சி. விமர்சித்தமைக்கு நாங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.
உண்மையில் இறுதிப் போரின் போது தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறிய விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி தாக்கினார்கள். அதேபோல் இலங்கை ஆயுதப் படைகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தவறான தகவல்களை பி.பி.சி பல தடவைகள் வெளியிட்டு வந்துள்ளது.
இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையிலான இரு தரப்பு நல்லுறவைப் பாதுகாக்கும் வகையில் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உங்களை வேண்டிக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (எ-61)

# மழையுடனான காலநிலை சிலநாள்களுக்கு தொடரும்

கொழும்பு, நவ.23
வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் அடுத்த சில நாள்களில் மழையுடனான வானிலை காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலும் பொலன்னறுவை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.
இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களாலும் பலத்த காற்றாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.
காங்கேசந்துறையிலிருந்து திருகோணமலை மற்றும் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.
நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது வடக்கு, கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுமென்பதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும். காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 70-80 கிலோ மீற்றர் வரையான) பலமான காற்று வீசுவதுடன் அந்தக் கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஹெரோயினுடன் அறுவர் கைது

கொழும்பு, நவ.23
ஹங்குரன்கெத்த மற்றும் ராகல பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் கஞ்சாவுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நீண்ட காலமாக ஹங்குரன்கெத்த மற்றும் ராகல, வலப்பனை ஆகிய பிரதேசப் பாடசாலைகளை இலக்காகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இந்த போதைப் பொருள் வர்த்தகம் சிலரால் முன்னெடுக்கப்படுகின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ஹங்குரன்கெத்தப் பிரதேசத்தில் வைத்து 580 மில்லி கிராம் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேகநபர்களும், ராகல பிரதேசத்தில் வைத்து இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 3 கிராம் 890 மில்லி கிராம் கஞ்சாவுடன் நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# லலித் வீரதுங்கவுக்கு விதித்திருந்த பயணத் தடையை நீக்கியது மன்று

கொழும்பு, நவ.23
முன்னாள் அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க வெளிநாடு செல்வதற்காக விதிக்கப்பட்டிருந்த தடையை மேன்முறையீட்டு நீதிமன்றம் 2020 ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி வரை தற்காலிகமாக நீக்கியுள்ளது.



லலித் வீரதுங்கவால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை ஒன்றைப் பரிசீலனை செய்த தீபாலி விஜேசுந்தர மற்றும் ருவன் பெர்னாண்டோ ஆகிய நீதிபதிகள் குழாமால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
லலித் வீரதுங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி காஞ்சன ரத்வத்தே, தனது கட்சிக்காரருக்கு அரச தலைவருடன் இந்தியாவுக்குப் பயணமொன்றை மேற்கொள்ள அழைப்பு வந்துள்ளதால், அந்தக் காலப்பகுதிக்காகத் தற்போது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.
அந்தக் கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள் குழாம் லலித் வீரதுங்க மீது விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையை மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரை தளர்த்துவதற்கு உத்தரவிட்டனர்.
சில் துணிகளை பகிர்ந்தளித்த குற்றச்சாட்டில் முன்னாள் அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுச பெல்பிட்ட ஆகியோருக்கு மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை மற்றும் 50 மில்லியன் ரூபா தண்டத்தையும் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க விதித்திருந்தார்.
உயர்நீதிமன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பு சட்டவிரோதமானது எனவும் அதனால் தம்மை அந்த வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்யுமாறும் லலித் வீரதுங்க மற்றும் அனுச பெல்பிட்ட ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.
முன்னைய அரசில் முன்னாள் அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுச பெல்பிட்ட ஆகியோர் நாடு முழுவதிலும் உள்ள விகாரைகளுக்கு சில் துணிகளைப் பகிர்ந்தளித்ததன் மூலம் அரசுக்கு 600 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது என்று தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவர்களுக்கு மூன்று வருட கடூழியச் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது. (எ)

# ஐ.தே.க. தலைமைத்துவத்தை சஜித்துக்கு வழங்க வேண்டும்

## ஹேசா விதானகே வலியுறுத்து

கொழும்பு, நவ.23
சஜித் பிரேமதாசவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.



கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கட்சியை வீழ்ச்சியில் இருந்து மீட்டெடுக்க வேண்டுமானால் ரணில் விக்ரமசிங்க புதிய ஒருவருக்கு தலைமைத்துவ பதவியை வழங்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்படாவிட்டால் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கட்சியின் செயற்குழு மற்றும் நாடாளுமன்ற குழுவின் கருத்துக்களை கேட்காவிட்டால் அதேபோல் சஜித் பிரேமதாசவுக்கு தலைமைத்துவத்தைக் கையளிக்காவிட்டால் நான் ஐக்கிய தேசியக் கட்சியின் இறக்குவானைத் தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவேன்.
ரணில் விக்ரமசிங்க கட்சி ஆதரவாளர்களின் கருத்தைப் புரிந்து கொண்டு கட்சியைப் படுகுழியில் இருந்து காப்பாற்ற வேண்டும் - என்றார். (எ)

# சஜித்தின் தோல்விக்கு நான் காரணம் என்று கூறமுடியா

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, நவ.23

அரசதலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாசவின் வேலைத் திட்டம் தடைப்பட்டமைக்கு தான் தான் காரணம் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார்.

நேற்று சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எனது யோசனையின்படி அரச தலைவர் தேர்தலில் எமது கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச நிறுத்தப்பட்டார். அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாசவின் வேலைத்திட்டம் தடைப்பட்டமைக்கு நான்தான் காரணம் என கூறுவதில் எந்தவொரு உண்மையும் இல்லை.

அவரை வெற்றியடையச் செய்வதற்காக ஏனைய கட்சிகளின் ஆதரவினை திரட்டிக்கொண்டு அரச தலைவர் தேர்தலில் பரைப்புரையை நாம்தான் முன்னெடுத்தோம். தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்களென ஒவ்வொருவருக்கும் முக்கிய பொறுப்புக்களை ஒதுக்கி கொடுத்தோம்.

எனக்கு, வடக்கு கிழக்கில் தேர்தல் பணிகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. அதற்கமைய அந்தப் பகுதியில் அதிக சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தோம். தெற்குப் பகுதியில் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியாமல் போனமேயே தோல்விக்கு காரணம்.

எமது கட்சியில் சிங்கள - பௌத்த அடிப்படை இழக்கப்படுவது குறித்து நாங்கள் முதலில் அவதானம் செலுத்த வேண்டும். இதற்கு முன்னர் இவ்வாறான ஒன்று இடம்பெற்றிருக்கவில்லை. இது தொடர்பில் நாங்கள் தேடிப்பார்க்க வேண்டும். அதன் ஊடாக, எதிர்கால தீர்மானங்களை எடுக்கப்பட்டதுடன், பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படவேண்டும்.

தேர்தல் தோல்வி குறித்து யாரை நோக்கியும் விரல் நீட்டுவதை விடுத்து, தோல்விக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்து நாங்கள் முன்னோக்கி செல்லவேண்டும். என்றார். (எ)

### சு.கவுக்கு புதிய அமைப்பாளர்கள்

கொழும்பு, நவ.23

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் புதிய அமைப்பாளர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர். கட்சியின் பதில்தலைவர்ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் காலத்தில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தலைமையில் சுகதாச அரங்கில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் கட்சியில் இருந்துநீக்கப்பட்டுள்ளனர். அந்த வெற்றிடங்களுக்கு புதிய அமைப்பாளர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கட்சியின் பதில் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

### தொடருந்தில் மோதி ஒருவர் சாவு

கொழும்பு, நவ.23

பெலியத்தவில் இருந்து காலி நோக்கிப் பயணித்த தொடருந்தில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹபராதுவரயில்நிலையத்திற்கு அருகாமையில் பெலியத்தவில் இருந்து காலி நோக்கி பயணித்த தொடருந்தில் மோதியே ஒருவர் உயிரிழந்துள்ளார்

உயிரிழந்த நபர் 59 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் காரப்பிட்டிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

### ஜெயரத்னவின் மறைவுக்கு சங்கரி இரங்கல்

கிளிநொச்சி, நவ. 23

முன்னாள் தலைமை அமைச்சர் டி.எம்.ஜெயரத்னவின் இறப்புக்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அனுதாபம் தெரிவித்துள்ளார்.

அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வேளை ஆற்றிய சேவைகள் மறக்கமுடியாதவை. அவரது பிரிவுக்காக அவருடைய குடும்பங்களுக்குஎனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்என்று அவர் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (த-6)

# பாதுகாப்பை சமமாக உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, நவ.23

பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என்ற பேதமின்றி இலங்கையர் என்றசமத்துவ உரிமையுடன்அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து சட்டத்தின் பாதுகாப்பை சமமாக உறுதிப்படுத்துவதுடன், அனைத்து இன மக்களும் சமாதானத்துடன் வாழக்கூடிய நாட்டை புதிய அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச கட்டியெழுப்ப வேண்டும்.

இவ்வாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லாட்சிக்கானதேசிய முன்னணியின் வேண்டுகோளை ஏற்றுத் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம். அதே வேளை இந்த நாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவராகப் பதவியேற்றிருக்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர் நாட்டுமக்கள் அனைவரும் சமத்துவமாகவும், சமூக நல்லிணக்கத்துடனும் வாழக்கூடிய பாதுகாப்பானநாட்டை கட்டியெழுப்புவார் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

எமது கட்சி நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலனை மட்டும் முதன்மையான நோக்காகக்கொண்டு இன, மத, பேத மற்று அதன் அரசியல் பயணத்தை முன்னெடுத்து வருகின்றது. சமூக நீதிக்காகவும் சகல சமூகங்களுக்கும் மத்தியிலுமான சக வாழ்வுக்காகவும் தொடந்து பாடுபடுவதுடன், ஊழல், மோசடிகளுக்கு எதிராகத் தொடர்ச்சியாக குரல் கொடுத்துவருகின்றது.

இந்தத் தேர்தலிலும் அனைத்து மக்களினதும் சமூக ஒற்றுமை, முறையான அபிவிருத்தி, ஊழலற்ற நாடு போன்ற பல குறிக்கோள்களை முன்வைத்து தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து அரசியல் பயணத்தை முன்னெடுத்திருந்தோம். எமது செயற்பாடுகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பொருளாதார ரீதியில் பலரும் பங்களிப்புக்களைச்செய்திருந்தனர். எம்மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் வகையில் எமது சமூகத்துக்காக நாம் தொடர்ந்தும் பணியாற்றவுள்ளோம்.

இந்தத் தேர்தலில் நாட்டிலுள்ள அனைத்து இன மக்களினதும் அபிலாசையாக இருந்த ஒரே விடயம் இந்த நாட்டில் தத்தமது உரிமைகளையும், கலாசாரத்தையும் பாதுகாக்கும் வகையிலான சமத்துவம் மிக்க ஆட்சியை கட்டியெழுப்ப வேண்டும் என்பதாகும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுவடைய செய்வதே அரச தலைவரின் வெற்றியை மேலும் வலுவடைய செய்வதாக அமையும். அதுவே இந்த நாட்டின் உண்மையான பாதுகாப்பான சூழலை உருவாக்க வழிவகுக்கும்- என்றுள்ளது. (எ-61)



பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுனரத்ன, பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவை நேற்று முன்தினம் சந்தித்தார். பாதுகாப்பு அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (எ)

# நல்லிணக்கத்தை முன்னிறுத்தி நடக்க வேண்டும் கோத்தபாய!

## பாக்கியசோதி சரவணமுத்து தெரிவிப்பு

கொழும்பு, நவ.23

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச நாட்டு மக்களிடையே நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கான தேவைப்பாட்டைப் புரிந்து கொண்டு அனைத்து இலங்கையர்களுக்குமான அரசதலைவர்என்றவகையில்அதற்கான நடவடிக்கையைமேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து வலியுறுத்தியிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தலில் சுமார் 47 சதவீதமானவர்கள் மாற்று வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கின்றார்கள். அவர்களுடைய வாக்குகளும் மதிக்கப்பட வேண்டும் என்று அரச தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவராக யார் தெரிவு செய்யப்பட்டாலும் வடக்குக்கும், தெற்குக்குமான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அதிகாரம் அவருக்கு இருக்கின்றது. நாட்டின் சிறுபான்மை மக்கள் ஒருபுறமும், பெரும்பான்மை மக்கள் மறுபுறமும் பயணிக்கும்படியாக இந்த முறை அரச தலைவர் தேர்தல் முடிவுகள் நாட்டை இரண்டாக பிளவுபடுத்தியிருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும்.

உண்மையில் நாட்டிலுள்ள அனைவரும் பரஸ்பரம் ஒருவர் மற்றொருவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமல், நாம் அடைந்துகொள்வதற்குத் தகுதியானவர்கள் என்றுகூறிவரும் சுபீட்சத்தின்பாதையை ஒருபோதும்கண்டுகொள்ள முடியாது. நல்லிணக்கமும் ஒருமைப்பாடும் எமக்கு இன்றியமையாதவையாகும். பெரும்பான்மையானவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகத்தின்ஊடாக அவற்றை அடைந்துகொள்ள முடியாது-என்றார். (எ)

# போதிய வாக்குகள் பெறாத டக்ளஸ் எம்.பி. பதவியைத் துறக்கவேண்டும்

## சிறிதரன் எம்.பி. அதிரடிக் கருத்து

யாழ்ப்பாணம், நவ. 23

அரசதலைவர் தேர்தலில் தோல்விகண்ட கட்சியின், தலைவர் ஜனநாயகப் பண்பை மதித்து தனது தலைமைஅமைச்சர் பதவியைத் துறந்தார். அதேபோன்று இந்த அரசதலைவர் தேர்தலில், நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தேவையானளவு வாக்குகளைக்கூட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பெற்றிருக்கவில்லை. அவரிடம் அதற்குரிய தகுதி இல்லாததால், அவரிடம் ஜனநாயகப் பண்பிருந்தால் நாடாளுமன்ற உறுப்புரிமையைத் துறக்க வேண்டும்.

இவ்வாறு அதிரடியாகக்கூறியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலைமைஅமைச்சரும் தேர்வாகுவது நாடாளுமன்றத் தேர்தல் மூலமாகவே. ஆனாலும் மக்கள் ஆணையை ஓர் தார்மீக அந்தஸ்தாகக் கணிப்பதும் வழமை. அந்த வகையில்

அரசதலைவர் தேர்தலில் தோல்விகண்ட கட்சியின் தலைவர் ஜனநாயகப் பண்பை மதித்து தனது தலைமைஅமைச்சர் பதவியைத் துறக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது நியாயமானது.

அந்தக் கோரிக்கையின் பெயரில் முன்னாள் தலைமைஅமைச்சர் பதவி துறந்தார்.

அதேபோன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தேவையானளவு வாக்குகளைக்கூட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அவரிடம் ஜனநாயகப் பண்பிருந்தால் நாடாளுமன்ற உறுப்புரிமையைத் துறக்க வேண்டும். அதாவது 2015ஆம் ஆண்டு 2 லட்சத்து 7 ஆயிரத்து 577 வாக்குகளைப் பெற்ற கூட்டமைப்பு 5 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டது. அதேபோன்று 30 ஆயிரத்து 232 வாக்குகள் பெற்ற ஈ.பீ.டீ.பி ஒரு ஆசனத்தைப் பெற்றது. 20 ஆயிரத்து 25 வாக்குகள் பெற்ற ஐ.தே.கட்சி சொற்ப வாக்குகளால் தப்பி ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொண்டது.

இதேநேரம் அடுத்த நிலையில் இருந்து 17 ஆயிரத்து 309 வாக்குகளை பெற்ற கட்சியால் ஆசனத்தைப் பெறமுடியவில்லை. அவ்வாறானால் 2019அரசதலைவர் தேர்தலில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஈ.பீ.டீ.பி., இ.அங்கயன் மற்றும் சில உதிரிகள் இணைந்து ஆதரித்த வேட்பாளரால் 27 ஆயிரம் வாக்குகளைத் தாண்டமுடியவில்லை.

அவ்வாறானால் தனித்து 20 ஆயிரம் வாக்குகளைக்கூடப் பெறமுடியாத நிலமையை ஏற்று தார்மீக முறையில் கட்சியின் பெயரில் மட்டும் ஜனநாயகம் அன்றி நடைமுறையிலும் ஜனநாயகப் பண்பிருந்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தே ஆகவேண்டும். - என்றார்.

(த-105)

# பொதுத் தேர்தலில் பெரமுனவுடன் இணைந்து போட்டியிட சு.க. முடிவு

கொழும்பு, நவ.23

பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.


சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டத்தில் அரச தலைவர் தேர்தலில் சுதந்திரக் கட்சி பெற்ற முன்னேற்றம், கட்சியிக் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக அந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி உட்பட, சில பிரதேச சபை உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளனர். (எ)

# ஐ.தே.க. ஆதரவாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்க

## கோத்தபாயவிடம் ரணில் கோரிக்கை


Ranil Wickremesinghe
@RW_UNP
I have discussed with the President the violence faced by UNP supporters, he assured me that it would be prevented. It is essential to ensure that the democratic rights of the people are protected not only during an election but after as well.
10:52 AM - Nov 22, 2019 - TweetDeck

கொழும்பு, நவ.23

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அவர் தனது டுவீற்றர் பக்கத்தில் பதிவேற்றியுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த அரச தலைவர் தேர்தலைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவானர்கள் எதிர்நோக்கி வரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அரச தலைவர் கவனம் செலுத்த வேண்டும் - என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ)

# இரசாயன தொழிற்சாலையில் தீ விபத்து

கொழும்பு, நவ.23

மொரட்டுவ, அங்குலானை கட்டுப்பெத்தவில் உள்ள இராசாயனத் தொழிற்சாலையில் நேற்று அதிகாலை பெரும் தீ விபத்து ஏற்பட்டது. தீயைக் கட்டுப்படுத்துவதற்காக மருதானை மற்றும் கல்கிஸ்சவில் இருந்து 12 தீயணைப்பு வாகனங்கள் அழைக்கப்பட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்குலானச் சந்தியில் அமைந்துள்ள இந்த இரசாயனத் தொழிற்சாலையில் அதிகாலை 3.15 மணியளவில் ஏற்பட்டுள்ளது. அந்தத் தொழிற்சாலை கட்டடம் நான்கு மாடிகளைக் கொண்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இருப்பினும் தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## நூரி தோட்டத்தில்

# ராணுவ முகாமை அமைக்கக் கோரி அரச தலைவருக்கு மக்கள் கடிதம்

கொழும்பு,நவ.23

கேகாலை மாவட்டம் தெரனியகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூரி தோட்டத்தில் அகற்றப்பட்ட இராணுவ முகாமை மீண்டும் அமைக்குமாறு கோரி கிராம மக்கள் சார்பில் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தில் அரச தேர்தலுக்காக வாக்களிக்கச் சென்று திரும்பிய நபர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து இந்தத் தோட்டத்தில் குறித்த சில வீடுகளும் தாக்கப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஆறு பேர் கைது செய்யபட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதனால் மக்கள் நாளாந்தம் அச்சத்துடன் இருப்பதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

நூரி தோட்டத்தில் சுமார் 7 வருடத்துக்கு முன்னர் தோட்ட முகாமையாளர் ஒருவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்வத்தைத் தொடர்ந்து, சம்பவத்துடன் தொடர்புபட்ட 18 பேருக்குத் தூக்குத் தண்டனை வழங்கபட்டது. இதனைத் தொடர்ந்து தோட்டத்தில் பாதுகாப்பு நிமித்தம் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் தோட்டத்திலும், தோட்டத்துக்கு அண்டிய கிராமப் பகுதியிலும், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதுடன், சட்ட விரோத மதுபான உற்பத்தி, சட்ட விரோத மரம் வெட்டுதல் வன்முறைகள், கள்ளத்தனமான மணல் விற்பனை போன்ற சட்ட விரோதமான செயற்பாடுகள் அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததுடன், மக்கள் நிம்மதியாக வாழ்ந்தனர்.

முன்னைய காலத்தில் பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவால் சிறப்பு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த அரசால் முகாம் அகற்றபட்டமையால், மீண்டும் பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன. எனவே அந்த இராணுவ முகாமை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தற்போது மீண்டும் மேற்படி சட்ட விரோதமான செயற்பாடுகள் அனைத்தும் அதிகரித்துள்ளன. இதனைக் கவனத்தில் கொண்டு புதிய அரச தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# பகிடிவதை குற்றச்சாட்டு: மாணவருக்கு பிணை

கொழும்பு, நவ.23



பகிடிவதையில் ஈடுபட்டமை தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ருகுணு பல்கலைக் கழகத்தின் 19 மாணவர்களுக்கு நேற்று மாத்தறை நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் மாத்தறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்கள் நேற்று 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான காசுப் பிணை மற்றும் தலா ஐந்து இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பிணை வழங்குவோரில் ஒவ்வொரு மாணவரின் பெற்றோரும் அல்லது நெருங்கிய உறவினர்களும் இருக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். ருகுணுப் பல்கலைக்கழகத்தின் விடுதிக்குள் நுழைவதைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல், மாணவர்களுக்கும் பயணத் தடை விதிக்கப்பட்டது.

தண்டனைச் சட்டம் மற்றும் பகிடிவதைச் சட்டத்தை மீறியதாக சந்தேக நபர்கள் மீது நான்கு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. (எ)

# அரச திணைக்கள வெற்றிடங்களுக்கு வறுமையிலிருப்போரை நியமியுங்கள்

## அமைச்சர்களுக்கு கோத்தா அதிரடி உத்தரவு

கொழும்பு, நவ. 23

அமைச்சுக்களுக்கான இராஜாங்க அமைச்சர்களையும், அரச திணைக்களங்களுக்கான அதிகாரிகளும் நியமிக்கப்படும் போது தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். அரச திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைச்சர்களுக்கு வேண்டியவர்களை நியமிப்பதை விடுத்து உரிய கல்வித் தகைமைகளை உடைய வறுமை நிலையிலிருப்பவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

இடைக்கால அரசுக்கான அமைச்சர்களின் பதவி பிரமாண நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுபீட்சமான நாட்டை உருவாக்குவதற்காக எமக்கு முதலாவது வாய்ப்பு கிடைத்தவுடன் பொதுத் தேர்தலை நடத்தி அரசுஅமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. அதற்காக நாம் மக்கள் ஆணையைக் கோரினோம். தற்போது தற்காலிக அரசே அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரசு எம்மால் மக்களுக்கு வழங்கப்பட்ட பிரதான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் 16 பேர் என்ற வரையறுக்கப்பட்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் காணப்பட்ட அரசியல் கலாசாரம் மீது பெரும்பாலான மக்கள் அதிருப்தியடைந்திருந்தனர். நாம் அந்த அரசியல் கலாசாரத்திலிருந்து வெளியேறி மக்கள் எதிர்பார்க்கும் புதிய யுகத்துக்குச் செல்ல வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட புதிய அமைச்சுக்களுக்கான இராஜாங்க அமைச்சர்களை எதிர்வரும் நாள்களில் நியமிக்க தீர்மானித்திருக்கின்றோம். நியமிக்கப்படும் இராஜாங்க அமைச்சர்களை அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அமைச்சர்கள் இடமளிப்பதோடு அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன். காரணம் கடந்த அரசில் இருந்த இராஜாங்க அமைச்சர்களுக்கு கையெழுத்திடுவதற்கு மாத்திரமே வாய்ப்பளிக்கப்பட்டது. வேறு அதிகாரங்கள் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு காணப்பட்டது. இதுவே யதார்த்தமாகும். எனவே புதிய அமைச்சர் இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகக் கூடாது.

மேலும் சில அரச திணைக்களங்கள் இழப்பிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றை இலாபம் பெறும் திணைக்களங்களாக மாற்றுவதோடு திறைசேரிக்கு சுமையற்றவையாகவும் உருவாக்க வேண்டும். நிச்சயமாக இதனை செய்ய முடியும். இவற்றை நிறைவேற்றக் கூடிய தகுதியானவர்களே இராஜாங்க அமைச்சர்களாகவும், அரச அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட வேண்டும். இவர்கள் தேர்வுக் குழுவொன்றினூடாகவே தெரிவு செய்யப்பட வேண்டும். இவர்கள் குறித்த தேர்வு குழுவில் பரிந்துரைக்கப்பட்டு அவற்றில் தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

தற்காலிக அமைச்சரவையை நியமிப்பதில் பெரிய சிக்கல் காணப்பட்டது. 19 ஆம் அரசமைப்புத் திருத்திற்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட 15 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையையே என்னால் நியமிக்கக் கூடியதாக இருந்தது. எனினும் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பே தற்போது எமக்கு பிரதானமாகக் காணப்படுகின்றமையால் எனக்கும் தலைமை அமைச்சருக்கும் நீங்கள் அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கோருகின்றேன். அதேபோன்று எதிர்காலத்தில் நாம் முகங்கொடுக்கவிருக்கும் தேர்தலிலும் முழுமையான வெற்றி பெற வேண்டிய தேவை இருக்கிறது - என்றார்.

(ஒ.5.31)



## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது

வடமராட்சி, நவ.23

வடமராட்சி உடுத்துறைப் பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் கடந்த புதன்கிழமை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. உடுத்துறைப் பகுதியிலிருந்து இயக்கச்சி ஊடாக வேறு இடத்துக்கு கஞ்சா கொண்டு செல்ல முற்பட்ட வேளை அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-70)

## அமைச்சுப் பதவியை ஏன் ஏற்கவில்லை? காரணத்தை விளக்கி கம்மன்பில கடிதம்

கொழும்பு, நவ. 23

இடைக்கால அமைச்சரவையில் உங்களுக்கு ஆதரவளித்த பலரும் அமைச்சுப்பதவியை எதிர்பார்க்கின்றார்கள். அதனால் 10 பேர் கொண்ட அமைச்சரவையை நியமிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், தற்போது அது தலைமை அமைச்சருடன் சேர்த்து 16 ஆக அதிகரித்திருக்கின்றது. புதிய அமைச்சரவையை நியமிப்பதில் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் முகம்கொடுத்துள்ள கடினத்தன்மை தொடர்பில் நன்கு சிந்தித்து இடைக்கால அரசில் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்குத் தீர்மானித்திருக்கிறேன். இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் அரச தலைவர் கோத்தபாயவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரின் விருப்பின்படி நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு அரச தலைவரிடம் கோரப்படவில்லை எனின், உங்களால் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதியின் பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

எனவே, தற்போது பதவியேற்றுக் கொண்டுள்ள தலைமை அமைச்சரின் அரசு இன்னமும் 100 நாள்களுக்கு மாத்திரமே நீடிக்கும். உங்களுக்கு ஆதரவளித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் 100 நாள்கள் இடைக்கால அரசில் அமைச்சுப் பதவியை எதிர்பார்க்கும் முன்னாள் அமைச்சரவை அமைச்சர்கள் 38 பேர் உள்ளனர்.

அதேபோன்று முன்னாள் அமைச்சர்களின்றி, மாவட்ட அமைப்பாளர்கள் பலரும் அமைச்சுப் பதவியை எதிர்பார்க்கின்றார்கள். 10 பேர் அடங்கிய அமைச்சரவை ஒன்றை நியமிக்க வேண்டுமென்றே நீங்கள் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தீர்கள். எனினும், தற்போது அது 16 ஆக உயர்ந்திருப்பதுடன், அதனைச் சமாளிப்பது மிகவும் கடினமானது என்பதை நானறிவேன். புதிய அமைச்சரவையை நியமிப்பதில் நீங்களும், தலைமை அமைச்சரும் முகம்கொடுத்துள்ள கடினத்தன்மை தொடர்பில் நன்கு சிந்தித்து இடைக்கால அரசில் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றேன். எனது இந்தத் தீர்மானம் நீங்கள் முகம்கொடுத்துள்ள சவாலை சற்றேனும் குறைக்கும் என்று கருதுகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஒ.5.22)

## சுகாதாரத் தொண்டர் நியமனத்தில் இன்னும் குழறுபடிகளே நீடிக்கின்றன

### பாதிக்கப்பட்டதாகக் கூறும் தொண்டர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 23

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போதும் பல மோசடிகளே காணப்படுகின்றன என்று தொண்டர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலம் பணியாற்றிய 456 சுகாதாரத் தொண்டர்களை நிரந்தரமாக்குமாறு பல ஆண்டுகளாக விடுத்த கோரிக்கையின் பெயரில் தலைமைச் செயலர் திறைசேரி, பொதுச் சேவை ஆணைக்குழுவினரின் அனுமதி பெற்று வழங்கியிருந்தனர். வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன. அதன்போது ஆவணங்கள் போலியானவை என்பதை கொழும்பு சுகாதார அமைச்சின் அதிகாரிகள் கூறினர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

456 பேருக்கு நியமனம் வழங்குவதற்கான பெயர்ப் பட்டியலைத் தயார் செய்த போது சுகாதாரத் தொண்டர்களாக எந்தக் காலத்திலும் பணியாற்றாத பலர் உள்ளனர். உண்மையான தொண்டர்களாகிய நாம் பெரும் போராட்டம் மேற்கொண்டோம். நியமனத்துக்குத் தெரிவானோர் பட்டியல் பகிரங்கப்படுத்தப்பட்டது. அதில் தொண்டர்களாகிய நாம் கூறியது உண்மை என்று நிரூபணமாகியது.

இந்த நிலையில் மீளவும் நேர்முகத் தேர்வுகள் இடம்பெற்றன. தற்போது வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலரும் மாற்றப்பட்டுள்ளார். தெரிவானவர்கள் யார் என்றே அறியாத நிலையில் மிக இரகசியமான முறையில் கடந்த திங்கட்கிழமை நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அனுப்பிய நியமனத்திலும் பல தொண்டர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர். அந்த இடங்களில் இரண்டு அதிகாரிகளின் தனிப்பட்ட அலுவலரின் சிபார்சு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவே சந்தேகிக்கின்றோம்.

மோசடி இடம்பெறவில்லையெனில் தெரிவான தொண்டர்களின் பெயர் விவரங்களைப் பகிரங்கப்படுத்தியிருக்க முடியும். அவ்வாறின்றி இரகசியமான முறையில் அனுப்பியுள்ளமை சந்தேகத்தை உறுதி செய்கின்றது எனத் தொண்டர்கள் குற்றஞ்சாட்டித் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் தெய்வேந்திரத்தைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "நியமனத்துக்குத் தெரிவானவர்களில் 386 பேருக்கு மட்டுமே கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுபவர்கள் மேன்முறையீடு செய்யமுடியும்." என்று தெரிவித்தார்.

இவ்வாறு தெரிவானவர்களின் பெயர்ப் பட்டியல் உண்டா என்று மாவட்டத்தின் சுகாதார மருத்துவ அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அதனை திங்கட் கிழமையே எமக்குச் சமர்ப்பிக்கவுள்ளோம். என்று கூறினர். (த-105)

# இலங்கையர்கள் அனைவருக்கும் 16 பேரும் சேவை செய்வோம்

## மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23
இடைக்கால அரசின் அமைச்சரவையின் அமைச்சர்களுக்கு வாழ்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், அவர்களோடு சேர்ந்து நாட்டு மக்களுக்குச் சேவை செய்யத் தயாராக உள்ளேன். இவ்வாறு தலை மை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தனது உத்தியோகபூர்வ கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இடைக்கால அரசுக்கான அமைச்சரவையில் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட 16 அமைச்சர்கள் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச முன்னிலையில் பதவி பிரமாணம் செய்துக்கொண்டனர். இந்தநிலையில், அவர்களுக்கு தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (ஒ.5,22)

# அமெரிக்கா, பங்களாதேஷ், ஜப்பான் பிரதிநிதிகள் கோத்தாவுடன் சந்திப்பு



கொழும்பு, நவ. 23
இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலியானா டெப்லிட்ஸ், ஜப்பான் தூதுவர் சுகியாமா அகிரா, பங்களாதேஷ் தூதுவர் ரியாஸ் ஹமிதுல்லா ஆகியோர், அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவை நேற்று நேரில் சந்தித்தனர்.

அமெரிக்கத் தூதுவருடன், அமெரிக்கத் தூதுவராலய செயற்பாடுகளுக்கான பிரதித் தலைவர் மார்ட்டின் கெலீ, அரசியல் செயற்பாடுகளுக்கான தலைவர் என்டனி ரென்சுலி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் க்லந்து கொண்டதுடன், இருதரப்பினரும் சுமூக கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதனிடையே இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் சுகியாமா அகிரா, கோத்தபாய ராஜபக்சவை சந்தித்துக் கலந்துரையாடினார். இலங்கைக்கான ஜப்பான் தூதுவராலய செயற்பாடுகளுக்கான பிரதி தலைவர் டொஷூ ஹிரோ கிதமுரா, பிரதி செயலர் தகேஷூ ஒஷிகி ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பங்களாதேஷ்; தூதுவர் ரியாஸ் ஹமிதுல்லா, நேற்று மாலை அரச தலைவர் கோத்தபாயவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது பங்களாதேஷ்; அரசின் சார்பில் கோத்தபாயவுக்கு வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார். (ஒ.5)

# தமிழ் அரசுக் கட்சி இளைஞர் அணி கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 23
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணியின் கூட்டம் வவுனியாவில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. கட்சியின் அரசியல் குழுக் கூட்டமும் நாளை இடம்பெறவுள்ளது. அரச தலைவர் தேர்தலின் பின்னரான நிலமைகள் தொடர்பில் இந்தக் கூட்டங்களில் ஆராயப்படவுள்ளது. (ஒ.5,105)

# கத்தோலிக்க திருச்சபையினரையும் உள்ளடக்கியே ஆணைக்குழு

## கோத்தா பேராயரிடம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 23
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்படவுள்ள அரச தலைவர் ஆணைக்குழுவில் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த உறுப்பினர்களும் பங்குபற்ற வேண்டும். இது தொடர்பில் பேராயருடன் கலந்துரையாடும் வரையிலேயே ஆணைக்குழு நியமிப்பதை ஒத்தி வைத்ததாக, அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோருக்கு இடையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு, கொழும்பு பேராயர் இல்லத்தில் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே கோத்தபாய மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் மீது முறையான விசாரணைகள்முன்னெடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டிய பேராயர், உங்களது ஆட்சியிலேனும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

பேராயர் ரஞ்சித் தொடர்ந்தும் தெரிவிக்கையில், கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சுமார் 300 பேருக்கும், அவர்களது உறவினர்களுக்குப் இது வரையில் சரியான தீர்வொன்று வழங்கப்படவில்லை. இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் மீது முறையான விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இந்தத் தாக்குதலை மறைக்கவே முயற்சி செய்தனர். காரணம்எந்தவொரு இனத்தையோ அல்லது மதத்தையோ பிரதிநிதித்துவப்படுத்துபவர்களுக்கு பிறிதொரு இனத்தையோ அல்லது மதத்தையோ பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் மீது தாக்குதலை முன்னெடுக்க முடியாது. எனவே உங்களது ஆட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார்.

பேராயரின் கருத்துக்குப் பதிலளித்த கோத்தபாய ராஜபக்ச, தற்கொலை குண்டு தாக்குதல்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சுயாதீன குழுவொன்றை நியமித்து விசாரணைகளை துரிதப்படுத்துகின்றேன். தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் யார், ஏன் எவ்வாறு இந்த தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன என்பது தொடர்பில் அந்த சுயாதீன குழுவினால் முழுமையாக ஆராயப்படும். அது மாத்திரமின்றி மீண்டுமொரு முறை நாட்டில் இவ்வாறானதொரு தாக்குதல் நடைபெறாது என்று உறுதியளிக்கின்றேன். இதனைச் செய்வதற்கு சிறந்தவொரு நபரையே பாதுகாப்பு செயலராக நியமித்திருக்கின்றேன். அவருக்கு இது தொடர்பில் பல ஆலோசனைகளை வழங்கியிருக்கின்றேன்.

இலங்கையின் புலனாய்வுத்துறையை பலப்படுத்துவதோடு, நான் பாதுகாப்புச் செயலராக இருந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துமாறும் புதிய பாதுகாப்பு செயலருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். விசாரணைகளை முன்னெடுப்பதோடு மாத்திரமின்றி தாக்குதலில் உயிரிழந்தவர்களதும், பாதிக்கப்பட்டவர்களதும் குடும்பங்களுக்கு உரிய உதவி வழங்கப்படாமல் இருக்குமானால் அதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள் ளது.

எம்மால் நியமிக்கப்படவுள்ள சுயாதீன குழுவில் உங்களது தரப்பிலிருந்தும் உறுப்பினர்களை நியமிக்க விரும்புகின்றீர்களானால் அது உங்களுக்கும் நம்பிகையை உருவாக்கும். எனவே தான் இது தொடர்பில் உங்களுடன் கலந்துரையாடிய பின்னர் சுயாதீனக் குழுவை நியமிக்கத் தீர்மானித்திருக்கின்றேன் என்று குறிப்பிட்டார்.

இதற்கு பதலளித்த பேராயர், ஏற்கனவே இதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவில் எம் சார்பில் சாட்சியளிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த ஆணைக்குழுவின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது, என்றார்.

'நான் சாட்சியளிப்பதை பற்றி கூறவில்லை. மாறான உங்களது தரப்பிலிருந்து ஒருவர் ஆணைக்குழுவில் ஒரு உறுப்பினராக அங்கத்துவம் வகிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும், என்று தனது கோரிக்கையை பேராயருக்கு தெளிவுபடுத்தினார் கோத்தபாய.

சில நாடுகளில் வெவ்வேறு இரகசியப் புலனாய்வு சேவைகள் காணப்படுகின்றமை தொடர்பில் பேராயர் வினவிய போது, அது போன்று இரகசிய புலனாய்வுச் சேவைகள் இலங்கையிலும் காணப்பட்டன. எனினும் தற்போது அவை செயலிழந்துள்ளன. போரின் போது தெற்கில் காணப்பட்ட பாதுகாப்பு முகாம்கள், ஆயுதங்கள் போன்றவற்றை எமது புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கூடாகவே தெரிந்து கொள்ள முடிந்தது.

அத்தோடு புலனாய்வுத் துறையினர் இராணுவத்துடன் இணைந்து சிறந்த சேவையை ஆற்றியிருந்தனர். காரணம் கடந்த 30 ஆண்டு காலப் போரின் போது இராணுவத்தினர் தான் புலனாய்வுத் துறையை வலுவடையச் செய்தனர். எனினும் அது காலம் செல்ல பலமிழந்தது. எவ்விதமான அழுத்தமும் இன்றி அவர்களை சுயமாக தமது கடமையை நிறைவேற்ற இடமளித்திருந்தால் எவ்வித பயங்கரவாதமும் இலங்கையில் தலைதூக்கியிருக்காது என்று நான் நம்புகின்றேன், என்று கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறெனில் புலனாய்வு துறையை அரசியல் அழுத்தங்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று பேராயர் கோத்தபாயவிடம் கேட்டுக் கொண்டார். (ஒ.5,61)

'உதயனின்'

# சிறுவர் மகிழ்களம் சாவகச்சேரியில் இன்று

யாழ்ப்பாணம், நவ. 23

உதயனின் ஏற்பாட்டில் நடைபெறும் சிறுவர் மகிழ்களம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இன்று பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு, இந்தியத் தூதரக துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் முதன்மை அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு அதிதிகளாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனும், நகர சபை மற்றும் பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மதிப்புறு அதிதிகளாக, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.சரோசாதேவி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், சாவகச்சேரி வர்த்தக சங்க உபதலைவர் வ.சிறிபிரகாஸ், சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் அ.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ.5)

# போராளிகளின் குடும்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடாது

## மன்னார் நகர சபைக்கு அநாமதேயக் கடிதம்

மன்னார், நவ. 23

மாவீரர் மற்றும் போராளிகளின் குடும்பங்களுக்கு மன்னார் நகர சபைத் தலைவரால் சலுகைகள் மற்றும் அன்பளிப்புக்கள் வழங்கப்படுகின்றன என்று அறிகின்றோம். அத்தகைய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்" என்றுகூறி 'இலங்கையன்' எனும் பெயரில் கடிதம் ஒன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபைத் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னார் நகர சபையில் தற்போது மாவீரர் மற்றும் போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு அதிகளவான வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அறிகின்றோம்.

சிறுவர் பூங்கா உட்பட பல பொது இடங்களில் புலிகளின் தேசிய நிறங்களான சிவப்பு, மஞ்சள் நிறங்கள் பூசப்பட்டுள்ளன.

மன்னார் மக்கள் வங்கிக்கு பின் புறமாக தற்போது கட்டப்பட்டு வரும் கடைகளில் பல கடைகள் மாவீரர் குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செயல்கள் இனியும் தொடரக் கூடாது. மாவீரர் மற்றும் போராளி குடும்பங்களுக்கு சலுகைகள் மற்றும் அன்பளிப்புக்கள் முன்னுரிமைகள் நிறுத்தப்பட வேண்டும். உங்களுக்குரிய அரச கடமையை மட்டும் சரியாகச் செய்யவும். உங்கள் அனைவரையும் பற்றித் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் நகர சபைத் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் தெரிவித்ததாவது:

மக்களுக்கான பணிகளை நாங்கள் நேர்மையாகவும், கண்ணியமாகவும், கட்டுக்கோப்புடனும் மேற்கொண்டு வருகின்றோம். நாங்கள் எந்தவித அச்சுறுத்தல்களுக்கும் அடி பணியப் போவதில்லை.

எந்தத் தடைகள் வந்தாலும் எமது இலக்கும், எமது பணிகளும் தொடர்ந்து இடம்பெறும்- என்றார். (த-56)

# எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் நழுவுகிறார் சபாநாயகர் கரு

கொழும்பு, நவ. 23

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதை நாடாளுமன்றத்தில் சபாநாயகரால் தீர்மானிக்க முடியாது என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். இது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தீர்க்கப்பட வேண்டிய உட்கட்சி விவகாரம் எனவும் இதனை நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேச அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க் கட்சியில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் உள்ள கட்சியில் நாடாளுமன்றக் குழுத் தலைவரே எதிர்க் கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படுவார் எனவும் சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது. அடுத்த நாடாளுமன்ற அமர்வுகளை கூட்டும் காலம், அடுத்ததாக ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளின் ஆசன ஒதுக்கீடுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் அதிகமாக பேசப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, டளஸ் அழகப்பெரும, ரவூப் ஹக்கீம், ரவி கருணாநாயக்க, தினேஷ் குணவர்த்தன, மகிந்த அமரவீர, டக்ளஸ் தேவானந்தா, விமல் வீரவன்ச, நிமல் சிறிபால டி சில்வா, அமீர் அலி, அஜித்.பி.பெரேரா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது எதிர்க்கட்சி தலைவர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தே ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய இருவரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்ட நிலையில் இருவரின் பெயர்களும் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்தது. இந்த நிலையில் எதிர்க் கட்சித் தலைவர் குறித்த சர்ச்சையும் இதன்போது எழுப்பப்பட்டது.

சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது குறித்தும் யாரை தெரிவுசெய்ய வேண்டும் என்பது குறித்தும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேசி அர்த்தமில்லை.

இந்த விடயமானது குழுவின் விடயப் பரப்புக்கு உட்பட்டதும் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க் கட்சியாக நாடாளுமன்றத்தில் அமரவுள்ள நிலையில் யார் எதிர்க் கட்சித் தலைவர் என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தீர்க்கப்பட வேண்டிய உட்கட்சி விவகாரம். இதனை நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பேச அவசியமில்லை, என்று சபாநாயகர் தெரிவித்தார். (ஓ.5)

### 7,000...

நாடு முழுவதும் உள்ள கிராம அலுவலர்களுக்கு உதவியாளர்களாக ஓர் ஆண்டு ஒப்பந்தப் பணியாளர்களாக 7 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டனர். அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்களின் நியமனத்தை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியிருந்தது.

இடைநிறுத்தப்பட்ட நியமனங்களை மீள வழங்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 17 ஆம் திகதி எழுத்தில் அனுமதி வழங்கியபோதும், தற்போது பதவியேற்றுள்ள புதிய அரசு அந்த நியமனங்களை முற்றாக நிறுத்தியுள்ளது. ரணில் அரசின் காலத்தில் அவரது அமைச்சின் ஊடாகவே இந்த நியமனங்களுக்கான நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டிருந்தது. கோத்தபாய அரசு, இந்த நியமனங்களை நிறுத்தியுள்ளமை அரசியல் பழிவாங்கலா என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (எ-105)

### யாழ்ப்பாணத்தை...

நெடுப்பது வழமை என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ.5)

### முத்தரப்பு...

தமிழர்களின் வேணவாக்களை நிறைவேற்றக் கூடியவாறு தீர்வு காணப்பட வேண்டும்' என்று புதிய அரச தலைவராக கோத்தபாய பதவியேற்ற கையோடு அவரை அவசர அவசரமாகச் சந்தித்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்திருந்தார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அரசின் கருத்தை மனதார வரவேற்கின்றேன். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் இது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். கோத்தபாய ராஜபக்ச பதவியேற்ற கையுடன் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு வந்து அவரை நேரில் சந்தித்து, இலங்கைத் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பில் பேசியமை எமக்கு முழு நம்பிக்கையை வழங்குகின்றது.

இலங்கை அரசு, நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பிலும், சமத்துவத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலும் பல வாக்குறுதிகளை இந்தியாவுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும், ஐ.நா.வுக்கும் வழங்கியிருந்தது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கைத் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இந்தியாவுக்கு முழுப் பங்கு உண்டு.

பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் சகல உரிமைகளுடன் ஏனைய இனங்களுடன் சமத்துவமாக வாழ்வதற்கே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். இதன் பிரகாரம் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை இந்த அரசு காணவேண்டும்- என்றார். (ஓ.5,22)

### மகிந்த...

ணம் செய்துகொண்டது. சில அமைச்சர்கள் உடனேயே தமது அமைச்சுக்களுக்குச் சென்று கடமைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு நடைபெற்றது. புதிய அமைச்சரவையில் டக்ளஸ் தேவானந்தா, ஆறுமுகம் தொண்டமான் ஆகிய இரு தமிழர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், முஸ்லிம்கள் எவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

புதிய அமைச்சர்களின் விவரம் வருமாறு.

**மகிந்த ராஜபக்ச** நிதி, பொருளாதார அலுவல்கள், கொள்கை அபிவிருத்தி, புத்த சாசனம், கலாசாரம், வீடமைப்பு வசதிகள், நீர் வழங்கல் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்

**நிமல் சிறிபால டி சில்வா** நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர்.

**ஆறுமுகம் தொண்டமான்** தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர்.

**தினேஷ் குணவர்தன** வெளிநாட்டு உறவுகள், திறன் அபிவிருத்தி, தொழிற்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்.

**டக்ளஸ் தேவானந்தா** மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர்.

**பவித்ரா வன்னியாராச்சி** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள், சமூக பாதுகாப்பு, சுகாதாரம், சுதேச மருத்துவத்துறை அமைச்சர்.

**பந்துல குணவர்தன** தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், உயர்கல்வி, தொழிநுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

**ஜனக்க பண்டார தென்னக்கோன்** பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர்.

**சமல் ராஜபக்ச** மகாவலி அபிவிருத்தி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய பொருளாதார அபிவிருத்தி, உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்கள் அமைச்சர்.

**டளஸ் அழகப்பெரும** கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர்.

**ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ** வீதி, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர்.


**விமல் வீரவன்ச** சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறை, தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர்.

**மகிந்த அமரவீர** பயணிகள் போக்குவரத்து, மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சர்.

**எஸ்.எம் சந்திரசேன** சுற்றாடல், வனஜீவராசிகள், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்.

**ரமேஷ் பத்திரன** பெருந்தோட்டத்துறை மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர்.

**பிரசன்ன ரணதுங்க** கைத்தொழில் ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான சேவைகள் அமைச்சர். (ஓ.5,22)



# இலையில் இருந்து மரம்

## இந்திய விவசாயி சாதனை

புதுடெல்லி,நவ.23

இலையை நட்டு அதை மரமாக வளர்க்கும் புதிய முறையைக் கண்டுபிடித்துள்ளார் இந்தியாவைச் சேர்ந்த விவசாயி ஒருவர். கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியைச் சேர்ந்த விவசாயி எஸ். ராஜரத்தினம் என்பவரே இதைக் கண்டு பிடித்துள்ளார். திசு வளர்ப்பு முறை அடிப்படையில் 'இலை வழி நாற்று முறை' எனப்படும் இந்த நுட்பம் சாத்தியமாகியுள்ளது. பொதுவாக விதைகளில் இருந்துதான் வேர் உருவாகி, செடி, மரம் ஆகியவை வளரும்.

இதனால் மரங்களை வளர்ப்பதற்கு விதைகள் அதிக அளவில் தேவைப்படுகின்றன. தற்போது சந்தைபடுத்தப்படும் பெரும்பாலான விதைகள் மரபணுக்களில் மாற்றம் செய்யப்பட்டு விற்கப் படுகின்றன.

இதைப் புறக்கணித்து, ஆரோக்கியமான தாவர வளர்ப்பை மேற்கொள்ள விரும்பிய குறித்த விவசாயி இலையிலிருந்து செடியை உருவாக்கும் 'இலை வழி நாற்று முறையை அறிமுகம் செய்து வேளாண்மை விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ளார். இதன் மூலம் உற்பத்திச் செலவு 30 சதவீதம் குறையும். அதே நேரத்தில் உற்பத்தியும் அதிகமாகும் " என்கிறார் அவர். ஐம்பது வயதாகும் இந்த விவசாயி கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பண்ணைத் தொழில்நுட்பத்தில் பட்டப்படிப்பை முடித்துவிட்டு, தற்போது முதுகலைப் பயின்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**விதை வழி பரவும் நோய்கள் தடுக்கப்படும்**

"திசு வளர்ப்பு முறை அடிப்படையில்தான் இலை வழி நாற்று முறையும் சாத்தியமாகியுள்ளது. திசு வளர்ப்பில் ஊக்கிகளைப் பயன்படுத்தி அணுக்களின் வளர்ச்சி தூண்டப்படும். அதுபோலவே, இலையின் நடுவே இருக்கக்கூடிய நடுக்காம்பின் வளர்ச்சியைத் தூண்டுவதால் வேர் உருவாகக்கூடிய சாத்தியத்தை இவர் உறு திப்ப டுத்தியுள்ளார். சில தாவரங்களில் விதையில் இருந்தே நோய்கள் இருக்கும். இந்த வளர்ப்பு முறையில் அவை தடுக்கப்படும். மேலும், அரிய வகை தாவர வகைகளை மீட்பதில் இலைவழி நாற்று முறை வருங்காலத்தில் பெரும்பங்கு வகிக்கும் என்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தெரிவித்தனர்.



# நித்யானந்தா தப்பி ஓட்டம்

## குஜராத் மாநிலப் பொலிஸார் தகவல்



புதுடெல்லி,நவ.23

குழந்தைகளைக் கடத்தி, அடைத்து வைத்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், நித்யானந்தா வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டதாக இந்தியாவின் குஜராத் மாநிலப் பொலிஸார் தெரிவித்தனர். கரிபியன் கடல் பகுதியில் உள்ள குட்டித் தீவுகளை உள்ளடக்கிய ஹடிரினிடாட் அன்ட் டொபாகோ எனும் நாட்டில் நித்யானந்தா உள்ளார் என்று இந்திய உளவு அமைப்பான 'றோ' தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

பெங்களூரு - பிடதியைத் தலைமையிடமாகக் கொண்டு பரமஹம்ச நித்யானந்த தியான பீடம் என்ற பெயரில் ஆசிரமம் நடத்தி வருபவர் நித்யானந்தா சுவாமி. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இவரது ஆசிரமத்தின் கிளைகள் உள்ளன. குஜராத் மாநிலம் ஆமதாபாத்தின் புறநகர்ப் பகுதியான ஹிராபூரில் உள்ள கிளையின் சார்பில், அங்குள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் 4 குழந்தைகளைத் தங்க வைத்து இருந்ததாகவும், நன்கொடை வசூலிக்குமாறு வற்புறுத்தி அவர்களை சித்ரவதை செய்ததாகவும் முறைப்பாடு எழுந்தது.

இது தொடர்பாக நித்யானந்தா மீது ஆமதாபாத் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நித்தியானந்தாவின் உதவியாளர்களாக இருந்த சாத்வி பிரன்பிரிய நந்தா, பிரிய தத்வ ரித்தி கிரண் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அந்த 4 குழந்தைகளும் மீட்கப்பட்டனர். இந்த நிலையிலேயே நித்யானந்தா வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றார்.

வெளிநாட்டில் இருக்கும் அவரை சட்டப்படி கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், இந்தியா திரும்பிய உடன் அவரை நாங்கள் நிச்சயமாகக் கைது செய்வோம் என்றும் பெங்களூருப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# நாடு ஆகின்றது தீவு!

பல தீவுகளின் தொகுப்பாகப்பப்புவாநியூகினியா நாட்டின் ஓர் மாகாணமாக இருந்துவருகின்ற பூகன்வில் எனும் தீவுக்கூட்டம் சுதந்திரமான தனி நாடாவது குறித்துக் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. பூகன்வில் தீவுக்கூட்டம் இதனால் புதிய நாடாகும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இன்று சனிக்கிழமை கருத்தறியும் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் பங்கேற்பதற்கு 2இலட்சத்து 7ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர்.

நவம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை பல கட்டங்களாக இந்த வாக்கெடுப்பு நடக்கவுள்ளது.

இதன் முடிவுகள் டிசெம்பர் மாத இறுதியில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கில் மூன்று பங்கினர் தனி நாடாகுவதற்கு ஆதரவு தெரிவித்தே வாக்களிப்பார்கள் என்று பன்னாட்டுக் கண்காணிப்பாளர்கள் கூறுகின்றனர். மூன்று லட்சம் மக்கள் தொகையுடன், 10ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள பூகன்வில் தனி நாடாக உருவானால் உலகிலேயே மிகச் சிறிய நாடுகளில் ஒன்றாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.



ஹொங்கொங்கின் 'பொலி ரெக்னிக்' பல்கலைக்கழகத்தில் நடந்துவருகின்ற போராட்டத்தை ஒடுக்குவதற்காகச் சீனாவின் இராணுவச் சிப்பாய்கள் வரவழைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுக் குறித்த ஒளிப்படத்தை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ்.

# மன்னிப்புச் சபையின் அறிக்கை ஆதாரமற்றது

## ஈரான் விமர்சனம்

தெஹ்ரான்,நவ.23
ஈரான் போராட்டத்தில் 100க்கும் அதிகமானவர்கள் சாவடைந்ததாகப் பன்னாட்டு மன்னிப்புச் சபை கூறியிருப்பது ஆதாரமற்றது என்று ஈரான் தெரிவித்தது. ஈரானில் எரி பொருள்களின் விலை உயர்வுக்கு எதிரான போராட்டத்தில் 100க்கும் அதிகமானவர்கள் சாவடைந்து இருக்கலாம் என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை தெரிவித்திருந்தது.
இதுகுறித்து ஐ.நா.வுக்கான ஈரானின் செய்தித் தொடர்பாளர் அலிரேசா கூறும்போது, தவறான தகவல் வெளிநாடுகளால் பரப்பப்படுகிறது. போராட்டத்தில் சாவடைந்தவர்களின் விவரத்தை ஈரான் அரசு இதுவரை வெளியிடவில்லை. பன்னாட்டு மன்னிப்புச் சபை கூறுவதில் நம்பகத்தன்மை இல்லை' என்றும் அமெரி தெரிவித்தார். தற்போது ஈரானில் படிப்படியாக வன்முறை குறைந்து நாட்டில் இயல்பு நிலை திரும்பியுள்ளதாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# நெதன்யாகு மீது ஊழல் குற்றச்சாட்டு

ஜெருசலோம்,நவ.23
இஸ்ரேலின் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெதன்யாகு மீது கையூட்டு பெற்றமை, மோசடி மற்றும் நம்பிக்கை மீறல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.
மூன்று வெவ்வேறு வழக்குகளில் இந்தக் குற்றச்சாட்டுகளை அந்த நாட்டின் அரச தலைமை வழக்குரைஞர் அவிச்சாய் மண்டெல்பிட் முன்வைத்தார். இஸ்ரேலின் மிகப் பெரும் தொழிலதிபர் ஒருவரிடமிருந்து சன்மானங்களை நெதன்யாகு பெற்றதாகவும், தன்னைப் பற்றி ஊடகங்களில் நேர்மறையான செய்திகள் வெளியிடப்பட வேண்டும் என்ற நோக்கில் பக்கச் சார்புடன் செயற்பட்டதாகவும் நெதன்யாகு மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தன் மீது சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்துப் பதிலளித்த பெஞ்சமின் நெதன்யாகு, இது திட்டமிடப்பட்ட சதி என்றும், தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகவும் கூறினார். விசாரணையில் உண்மை எட்டப்படாமல் என் மீது பழி சுமத்தப்படுகிறது என்றும் கூறினார்.
இதுகுறித்துக் கருத்துரைத்த அவிச்சாய் மண்டெல்பிட், கனமான இதயத்துடன் இந்த முடிவை எடுத்ததாதகவும், இஸ்ரேலில் சட்டத்தைவிட உயர்ந்தவர்கள் இல்லை என்றும் தெரிவித்தார்.





# தென் சீனக் கடலில் அமெரிக்கக் கப்பல்கள்!

வோஷிங்டன்,நவ.23
அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் இரண்டு தென் சீனக் கடல் பகுதியில் பயணித்தன என்று சீன இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழை பன்னாட்டு ஊடகங்களிடம் தெரிவித்தார். அமெரிக்கக் கடற்படைப் பேச்சாளரான கொமாண்டர் ரீன் மொம்சனும் தங்களின் இரண்டு போர்க் கப்பல்கள் குறிப்பிட்ட இந்தக் கடல்பகுதியில் பயணித்தமையை உறுதி செய்தார்.
அந்தப் பயணங்கள் தங்களின் சட்டப்படியான உரிமையையும், தங்களுடைய சுதந்திரத்தையும் வெளிப்படுத்த மேற்கொள்ளப்பட்டவை என்று அவர் பன்னாட்டு ஊடகங்களிடம் மேலும் தெரிவித்தார்.
தென் சீனக் கடற்பகுதியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயலும் சீனா, அமெரிக்காவின் இந்தக் கப்பல்களின் பயணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.
அமெரிக்காசீனாவுக்கு இடையில் இடம் பெறும் வர்த்தகப்போரில், அமெரிக்கா மேற்கொண்டிருக்கின்ற மற்றுமொரு நடவடிக்கைத் தான் இது என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி ஆகியன தீட்டிய சதி முறியடிப்பு

## ஈரான் அதிபர் ருஹானி தெரிவிப்பு

தெஹ்ரான்,நவ.23
ஈரான் போராட்டத்தின் பின்னணியில் இருந்த அமெரிக்காவின் சதி முறியடிக்கப்பட்டது என்று ஈரான் அதிபர் ஹசன் ருஹானி தெரிவித்தார். பெட்ரோல் விலையை அதிகரித்து அறிவிப்பு விடுத்ததில் இருந்து ஈரானில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.
இந்த நிலையிலேயே ஈரான் அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். போராட்டம் நடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கைகளை ஈரான் அரசு எடுத்ததாகப் பன்னாட்டளவில்



பேசப்பட்ட சூழலில், இந்தப் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக ஈரான் தலைவர்கள் சாடி வந்தனர்.
இந்த நிலையில் போராட்டத்தின் பின்னணியில் இருந்து வன்முறையின் மூலம் ஈரானில் அமைதியற்ற சூழ்நிலையை ஏற்படுத்த முயன்ற எதிரி நாடுகளின் சதியை வெற்றிகரமாக முறியடித்து விட்டோம். சவூதி அரேபியா, இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளால் வகுக்கப்பட்ட சதித் திட்டம் முறியடிக்கப்பட்டு உள்ளது. ஈரானிய மக்கள் மீண்டும் ஒரு வரலாற்று சோதனையில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த விடயத்தில் எங்கள் மீது விமர்சனங்கள் இருந்தாலும் சூழ்நிலையை எதிரிகள் பயன்படுத்திக் கொள்ள விட மாட்டோம் என்பதை மக்கள் நிரூபித்துள்ளனர் என்று ஹசன் ருஹானி மேலும் தெரிவித்தார்.



# இன்றைய நாள்

**மேடம்:** நண்பர்களிடம் உங்கள் மீதான நன்மதிப்பு வளரும். தொழிலில் உற்பத்தி; விற்பனை இலக்கு நிறைவேறும். உபரி பண வரவு கிடைக்கும். வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள். விவகாரங்களில் சுமூக தீர்வு கிடைக்கும்..

**இடபம்:** சொந்த பணியில் கவனம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பினால் அனுகூலம் உண்டாகும். சராசரி அளவில் பண வரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உங்கள் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கை அடைய் கால அவகாசம் தேவைப்படும். விஷ பிராணிகளிடம் விலகுவது நல்லது.

**கடகம்:** இஷ்ட தெய்வத்தின் அருளால் இடையூறு விலகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு முன்னேற்றம் பெறும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**சிம்மம்:** குடும்ப உறுப்பினர்களிடம் ஒற்றுமை அவசியம். தொழிலில் உருவாகிற இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பண செலவு அதிகரிக்கும். அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**கன்னி:** உங்கள் செயல்களில் சுதந்திர மன பாங்கு மிகுந்திருக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு உருவாகும். தகுந்த உழைப்பால் அதிக பண வரவு பெறுவீர்கள். குடும்ப பிரச்னையில் சுமூக தீர்வு கிடைக்கும்.

**துலாம்:** உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாத்திடுவீர்கள். அளவான பண வரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். பணிகளை நேர்த்தியாக நிறைவேற்றுவீர்கள். ஆதாய பண வரவு கிடைக்கும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு.

**தனுசு:** இன்று நண்பரின் உதவியால் செயல்களில் உத்வேகம் பிறக்கும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள அளவில் பண வரவு கிடைக்கும்.

**மகரம்:** அடுத்தவர் வாங்கும் பொருளுக்கு நீங்கள் பேரம் பேச வேண்டாம். தொழில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். அத்தியாவசிய செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படும்.

**கும்பம்:** கவன குறைவால் பணிகளில் குளறுபடி ஏற்படலாம். குடும்ப தேவைகளுக்கான பண செலவு அதிகரிக்கும்.. சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**மீனம்:** சிறு விஷயத்திலும் முன் யோசனையுடன் செயல்படுவீர்கள். பணி குறித்த காலத்தில் நிறைவேறும். தொழில், வியாபார நடைமுறை திருப்திகரமாகும்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.23
வலிகாமம் கால்பந்தாட்டா லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள கால்பந்தாட்ட லீக்குகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் நவரட்ண ராஜா ஞாபகார்த்த தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெறவுள்ளது.
இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியைஎதிர்த்து சென்நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம், நவ.23
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்துப்படும் தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை இரவு 6 மணிக்கு இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெறவுள்ளது. இதில் சென்பீற்றஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியோடு மருதநிலா விளையாட்டுக் கழகம் நடத்தும் மருதநிலா வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 11 பேர் வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்இன்று சனிக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இதில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில். ஈஸ்வரன்விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஏ. பி .சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அல்மாதார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,நவ.23
கல்வியங்காடு ஞானபாஸ்கரா சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அமரர் ஜி.ரி. ஞானசேகரவேல் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடர் இன்று சனிக் கிழமை ஆரம்பமாகின்றது. இந்தப் போட்டி அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் 6 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான போட்டியாக இடம்பெறும்.

# இங்கிலாந்து பந்து வீச்சில் தடுமாறும் நியூசிலாந்து

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் நியூசிலாந்து அணி திணறி வருகின்றது. தனது முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.
இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் ஐந்து ரி-20 போட்டிகள் இடம்பெற்றது. இதில் இங்கிலாந்து அணி 3:2 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. இரு அணிகளுக்குமிடையில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் நேற்றுமுன்தினம் முதலாவது போட்டி மவுண்ட் மவுங்கானுயில் ஆரம்பமாகியது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது. முதல் நாள் முடிவில் இங்கிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. பென்ஸ்டோக்ஸ் 67 ஓட்டங்களுடனும், பொப் 18 ஓட்டங்களுடனும் நேற்றைய இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். ஆட்டத்தை இருவரும் இணைந்து நிதானமாக கொண்டு செல்ல முற்பட்ட போது பென்ஸ்டோக்ஸ் தனது சதத்தைத் தவற விட்டு 91 ஓட்டங்களில் சவூத்தியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த பட்லர் அதிர காட்டினார். அவர் 5 நான்கு ஓட்டங்கள் ஓர் ஆறு ஓட்டம் அடங்கலாக 43 ஓட்டங் கள் பெற்ற போது தனது அரைச் சதத்தை தவற விட்டு ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் பெரிதாக சோபிக்காது போக அணி 353 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.
பந்து வீச்சில் சவூத்தி 4 இலக்குகளையும், வாக்னர் 3 இலக்குகளையும், கிராண்ஹோம் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். பின்னர் தனது முதலாவது இன்னிங் ஸுக்காகக் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக லாதம், ராவல் களமிறங்கினர். அணி 18 ஓட்டங்களைப் பெற்ற போதே முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. லாதம் 8 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் எல்.பி.டப்ளியு முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வில்லியம்சன், ராவல் இணை அணியை சிறிது மீட்டெடுத்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ராவல் 19 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். வில்லியம்சன் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். பின்னர் களமிறங்கிய ரெய்லரும் 25 ஓட்டங்களுடன்ஆட்டமிழந்துபவிலியன்திரும்பினார். அணி நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. நிக்கோலஸ் 26 ஓட்டங்களுடனும், வற்லிங் 6 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர். பந்து வீச்சில் சாம் கரன் அதிகபட்சமாக 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.



## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் நவ. 23
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் சதுரங்கப் போட்டிகள் எதிர்வரும் 30ஆம் திகதி இடம் பெறவுள்ளது. மேற்படி போட்டியில் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 8, 10,12, 14, 16, 18, 20 வயதுப் பிரிவுகளுக் குட்பட்ட ஆண், பெண் இருபாலரிலும் தலா 10 பேர் எனும் அடிப்படையில் விண்ணப்பங்களை நாளை மறுதினம் திங்கட் கிழமை செ.உதயகுமார் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வடக்கு மாகாணம் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (23-104)

செவிப்புலனற்றோருக்கான துடுப்பாட்டப் போட்டி

## வடக்கில் இருந்து 3 தமிழ் வீரர்கள்

யாழ்ப்பாணம், நவ. 23
இந்தியாவில் நடைபெறும் செவிப்புலனற்றோருக்கான துடுப்பாட்டப் போட்டியில் பங்குபற்றவிருக்கும் இலங்கை அணியில் திருக்குமரன், கலேப்,நேர்மன் ஆகிய மூன்று தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.
இவர்களுக்கான போக்குவரத்துக்கான செலவினங்களை பிரித்தானியா தமிழ் துடுப்பாட்டச் சம்மேளனத்தினர் வழங்கியுள்ளனர். (23)

## போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.சி.சி.சி. கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடருக்கான போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது. எனவே விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர் கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.23
வலிகாமம் கால்பந்தாட்டா லீக்கின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள கால்பந்தாட்ட லீக்குகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் நவரட்ணராஜா ஞாபகார்த்த தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடரில் இளவாலை யங்ஹென்றிஸ்விளையாட்டுக்கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

---

யாழ்ப்பாணம், நவ. 23
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில்நடத்தப்படும் தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 6 மணிக்கு இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில்இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாவத்தை விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சம நிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# டேவிட் வோர்னர் அபார சதம் ஆஸி. வலுவான நிலையில்

## பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் பரிதாபம்



ஆஸ்திரேலியா அணியின் இலக்குகளை கைப்பற்ற திணறும் பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள். டேவிட் வோர்னர் சதம் கடந்து ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார்.

பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் பிரிஸ்பேனில் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடி முதல் நாள் முடிவில் தனது முதல் இன்னிங்ஸில் 240 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது.

ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸுக்காகக் நேற்றுக் களமிறங்கியது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டேவிட் வோர்னர், பேர்ன்ஸ் களமிறங்கினர். இருவரும் இணைந்து அணிக்கு நல்லதொரு இணைப்பாட்டத்தை கொடுத்தனர். இருவரது இணைப்பாட்டத்தை பிரிப்பதற்கு பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் பெரும் சிரமப்பட்டனர். டேவிட் வோர்னர் 56 ஓட்டங்கள் பெற்ற போது 16 வயது அறிமுக வேகப்பந்து வீச்சாளர் நசீம்ஷா பந்து வீச்சில் பிடியெடுப்பு ஒன்று எடுக்கப்பட்டது. ஆனால் அது முறையற்ற பந்து வீச்சு என்று அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அவர் தனது அதிரடியை வெளிப்படுத்த ஆரம்பித்தார். அவர் சதம் கடந்து அசத்த அணி பலம் பெற ஆரம்பித்தது. அணியின் முதலாவது இலக்கு அணி 222 ஓட்டங்களைப் பெற்ற போதே இழக்கப்பட்டது. பேர்ன்ஸ் தனது சதத்தைத் தவற விட்டு 97 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். வந்தார் லாபஸ்சாக்னே. இவர் வோர்னருடன் இணைந்து அவருக்கு இணையாக ஆட ஆரம்பித்தார். அவரும் அரைச் சதம் கடந்து அசத்த பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களின் நிலை பரிதாபமானது. நாள் முடிவில் ஆஸ்திரேலியா அணி ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 312 ஓட்டங்களைப் பெற்றது. டேவிட் வோர்னர் 151 ஓட்டங்களுடனும், லாபஸ்சாக்னே 55 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.



# இலங்கை அணிக்கு துடுப்பாட்ட, பந்துவீச்சு பயிற்றுநர் நியமனம்

இலங்கை அணியின் புதிய துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக சிம்பாப்வேயின் முன்னாள் வீரர் அன்டி பிளவரும் பந்து வீச்சு பயிற்றுவிப்பாளராக ஆஸ்திரேலியாவின் டேவிட் சகெரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருவரும் இலங்கை அணியுடன் அடுத்த மாதம் இணைந்து கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக மிக்கி ஆர்தரையும் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக சேன் மக்டொமெர்ட்டையும் நியமிப்பது என தீர்மானித்துள்ளதை தொடர்ந்தே இந்த நியமனங்களை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மேற்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவை சேர்ந்த முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான டேவிட்சகெர் இங்கிலாந்து ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்களின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்.

இங்கிலாந்தின் பந்து வீச்சு பயிற்றுவிப்பாளராக பணியாற்றியுள்ள அவர் இங்கிலாந்தின் மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர்கள் குழாமை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பை வழங்கினார். என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஆஸ்திரேலியாவால் மிகவும் எதிர்பார்க்கப்படும் வேகப்பந்து வீச்சாளரான மத்தியு கேலின் வளர்ச்சிக்கும் இவரே காரணமாக விளங்குகின்றார்.



# இந்திய அணியின் பந்து வீச்சில் சுருண்டது பங்களாதேஷ் அணி



இந்திய அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 106 ஓட்டங்களுக்குள் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று ஈடன் கார்டன் மைதானத்தில் ஆரம்பமாகியது.

பகலிரவாக நடைபெறும் இந்தப் போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

களமிறங்கிய பங்களாதேஷ் அணியின் முதலாவது இலக்கு அணி 15 ஓட்டங்களைப் பெற்ற போதே இழக்கப்பட்டது. இம்றூ கஜிஸ் 4 ஓட்டங்களைப் பெற்ற போது இஷாந் சர்மாவின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். அணி 38 ஓட்டங்களைப் பெற்ற போது 5 இலக்குகளை இழந்து பரிதவித்தது. அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர்களான அணித் தலைவர் ஹக், மிதுன், முஷ்பிகுர் ரஹீம் ஆகியோர் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். அணியின் அதிகபட்ச ஓட்டமாக சட்மன் இஸ்லாம் பெற்ற 29 ஓட்டங்களே ஆகும். ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். அணி 30.3 பந்துப்பரிமாற்றங்களில் 106 ஓட்டங்கள் பெற்ற போது சகல இலக்குகளையும் இழந்தது.

பந்து வீச்சில் இஷாந்த் ஷர்மா சிறப்பாக பந்து வீசி 5 இலக்குகளைச் சாய்த்தார். உமேஷ் யாதவ் 3 இலக்குகளையும், மொஹமட் ஷமி 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தனது முதல் இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அகர்வால், ரோகித் களமிறங்கினர். அணி 26 ஓட்டங்களைப் பெற்றபோது அகர்வால் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து சர்மாவும் 21 ஓட்டங்களைப் பெற்ற போது எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். பின்னர் இணைந்த புஜாரா, கோக்லி இணை அணிக்கு ஓரளவு நம்பிக்கையளித்தனர். புஜாரா அரைச் சதம் கடந்து ஆட்டமிழந்தார். அணி நேற்யை நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. கோக்லி 59 ஓட்டங்களுடனும், ரஹானே 23 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.



# 2023 வரை எனது ஆட்டம் தொடரும்

## மத்தியூஸ் நம்பிக்கை

எதிர்வரும் 2023ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள பன்னாட்டு ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் வரை விளையாடுவதே எனது குறிக்கோள் என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளதுடன், அதுவரை சிறப்பாக விளையாடுவதற்கு நான் எனது உடற் தகுதியை பேண வேண்டும் என்றும் குறிப்பிட்டுள் ளார். மத்தியூஸ், கடந்த 2008 ஆம் ஆண்டு பன்னாட்டு கிரிக்கெட் உலகில் அறிமுகமானார். அன்றிலிருந்து இலங்கை அணியின் அதிக வெற்றிகளுக்கு பங்களிப்பு செய்துள்ளார்.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் இரண்டிலும் சிறந்து விளங்கிய மத்தியூஸ் எந்தவொரு போட்டியையும் மாற்றும் திறன் கொண்டவர். எனினும் காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக பந்து வீச்சிலிருந்து விலகியிருந்தாலும் ஒரு துடுப்பாட்ட வீரராக தனது பங்களிப்பை அவர் சிறப்பாக வழங்கி வருகிறார்.

பன்னாட்டு அணிக்காக விளையாடும் காலத்தில் ஒரு துடுப்பாட்ட வீரராக அவர் பெற்ற சாதனைகள் மகத்தானவை. டெஸ்ட் அரங்கில் அவரது இன்னிங்ஸ் சராசரி 44.41, ஒருநாள் அரங்கில் அவரது இன்னிங்ஸ் சராசரி 42.7 மற்றும் ரி-20 அரங்கில் அரவது இன்னிங்ஸ் சராசரி 27.1ஆகும். நியூசிலாந்துக்கு எதிராக கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற இரண்டு போட்டிகளை தொடர்ந்து மத்தியூஸுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவரது ஓய்வு நேரத்தில் எவ்வாறு காலத்தை கழித்தார் என்பது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்;

சுமார் இரண்டரை மாதங்கள் எனக்கு இடைவெளி கிடைத்தது. நான் உடல் ரீதியாக ஆரோக்கியமாக இருக்க அந்த ஓய்வை பயன்படுத்தினேன். நான் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சிலும் கடுமையாக உழைத்தேன். நியூசிலாந்து சுற்றுப்பயணத்துக்குப் பின்னர் மீண்டும் பந்துவீச தொடங்கியுள்ளதுடன், அதனால் கடந்த இரண்டரை மாதங்களாக நான் பந்துவீச்சு பயிற்சிசெய்து வருகிறேன்.

அத்துடன் நான் நீண்ட காலமாக போட்டிகளில் விளையாடவில்லை. ஆனால் நான் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிக்கு நன்கு தயாராக இருக்கிறேன்.

இலங்கை டெஸ்ட் அணி சுமார் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தானுக்கு புறப்படவுள்ளது. இதனால் தனிப்பட்ட முறையில், நான் சுற்றுப் பயணத்துக்கு நன்கு தயாராக இருக்கிறேன். பாகிஸ்தானுடனான டெஸ்ட் சுற்றுப் பயணத்தை தொடர்ந்து எங்களுக்கு அதிகளவான தொடர்கள் உள்ளன. ஆகவே அதற்கு தயாராக வேண்டும்.

அதேநேரம் பந்து வீச்சுப் பயிற்சியில் தற்போது ஈடுபடும் நான் ரி-20 கிரிக்கெட் போட்டிகளில் மாத்திரம் பந்து வீசத் தீர்மானித்துள்ளேன் - என்றார்.

O/L மாணவர்களுக்கான கருத்தரங்கு
வரலாறு
ஆசிரியர்: R.S. சந்திரன்
காலம்
நவம்பர் 24 ஞாயிற்றுக்கிழமை (காலை 8.30-2.00)
நவம்பர் 25 திங்கட்கிழமை (காலை 8.30-2.00)
நவம்பர் 26 செவ்வாய்கிழமை (பி.ப 3.00-5.00)
கட்டணம் 600/=
குறிப்பு
1. ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
2. எதிர்பார்க்கை வினாக்களும் பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்
3. இலங்கைப்படம், உலகப்படம் இலகு முறையின் அடிப்படையில் குறித்துக் காட்டப்படும்
றோயல் அக்கடமி
அரசடி றோட், யாழ்நகர்
0776649134

வேலையாள்கள் தேவை
வெதுப்பகம் ஒன்றிற்கு வெதுப்பக வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு.
077 466 9114

பணியாளர் தேவை
வவுனியாவில் அரச உத்தியோகத்தர் ஒருவரின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு ஒழுக்கமான பெண் பணியாளர் ஒருவர் தேவை. சம்பளம் 25,000/= வழங்கப்படும்.
077 015 1719, 077 651 6747

### மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.03.1946 | 21.11.2019 |

### திருமதி சண்முகரட்ணம் சறோஜினிதேவி

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகரத்தினம் சறோஜினிதேவி 21.11.2019 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆருரையா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், சசிகலா (லண்டன்), கம்சினி (லண்டன்), காலஞ்சென்ற கல்பனா, மகிழ்ராஜ் ஆகியோரின் அன்புத் தாயும், கௌரிதாசன் (லண்டன்), சிவதயாளன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், அபூர்வன், ஆரூசன், ஆகர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பரமேஸ்வரி, இராஜபூபதி, லோகநாதன், இராஜேந்திரம், ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நவரத்தினராசாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/5, அபூர்வவாசா,
சுன்னாகம் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(cs.29472) (13.17)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22.11.2019 | வெற்றி வாரம் 2685 | வர்ணம் கடும்நீலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 10 37 43 55
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
23.11.2019 ம் திகதி சனிக் கிழமை இளம் நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1078
சீட்டிழுப்பு திகதி 2019.11.21 வியாழக்கிழமை
P 19 23 39 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,445,072/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 799
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.11.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,421,390/-
வெற்றி இலக்கங்கள் 18 24 44 59
ஆங்கில எழுத்து P
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0114 825 825

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 299
சீட்டிழுப்பு திகதி 22.11.2019 சிகப்பு
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 02 27 52
விதி எண் 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 47, 383, 180/=
27.11.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.